
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜனவரி 6 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
89 1932 - 2021
வரு. 90 இல. 05 | Thursday 06, January, 2022 | 16பக்கங்கள் | 30/-

MOBILE Viber விசே„ உடன் தமாஷாகுங்கள் Rakuten Viber SLTMOBITEL

## 53,177 பட்டதாரிகளுக்கு ஜன. 03ல் நிரந்தர நியமனம்

அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 53,177 பட்டதாரிகளும் ஜனவரி 03ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், 06

12 – 15 வயதுக்கிடைப்பட்ட அனைத்து

## சிறுவர்களுக்கும் நாளை முதல் தடுப்பூசி வழங்கல் ஆரம்பம்

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் 06

## மக்களுக்கான நிவாரணத்தை ஜீரணிக்க முடியாத எதிரணியினர்

நிதியமைச்சர் தூரதிருஷ்டியுடனான செயலுக்கு பாராட்டு



**ஷம்ஸ் பாஹிம்**

மக்களுக்கு வழங்கிய நிவாரணப் பொதியை எதிரணியால் ஜீரணிக்க முடியாதுள்ளது. இந்த சலுகையின் காரணமாக பணவீக்கம் ஏற்படுமென எதிரணி குற்றஞ்சாட்டுவதற்கு இதுவே காரணம் என தெரிவித்த அமைச்சர் ரோஹித 06

தரம் 01 முதல் 13 வரையிலான வகுப்புகளை கொண்ட

# சகல பாடசாலைகளும் திங்கள் முதல் வழமைக்கு

கல்வியமைச்சுக்கு சுகாதார அமைச்சு அனுமதி



பகுதியளவில் இயங்கிய பாடசாலைகள் மீண்டும் முழுமையாக பழைய நிலைக்கு திரும்புகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா சூழ்நிலை காரணமாக இதுவரை பகுதி பகுதியாக நடத்தப்பட்டு வந்த வகுப்புகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமைபோன்று நடைபெறும் 06



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நேற்று (05) மத அனுஷ்டானங்களில் ஈடுபட்ட பின்னர் வழிபாட்டுக்காக வந்திருந்த பொது மக்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடி அவர்களின் நலன் விசாரித்தறிந்து கொண்டார்.



## 2000 கோடிக்கு இரத்தினக் கல்லை வழங்க மாட்டோம்

03

## 20 ஐ இரத்து செய்ய 19 அவசியம் தேவை

மைத்திரிபால சிறிசேன வலியுறுத்து



**லோரன்ஸ் செல்வநாயகம், உக்குவளை விசேட, மாத்தளை சுழற்சி நிருபர்கள்**

உடனடியாக 20வது அரசியலமைப்பு திருத்தத்தை ரத்து செய்து 06

## தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் குறித்து ஆய்வு

தமிழ்நாடு அரசாங்கம் நடவடிக்கை

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் குறித்த ஆய்வொன்றை நடத்த மாநில அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கிறது.

கடந்த ஜுலை மாதம் முதலாம் 06

ஐ.தே.க அதிகாரத்திலுள்ள

## இரு பிரதேச சபைகளின் தலைவர்கள் நீக்கம்

மத்திய மாகாண ஆளுநர் அதிரடி

**எம்.ஏ.அமீனுல்லாஹ்**

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்திலுள்ள கண்டி, கங்கவட 06

நாட்டின் ஒமிக்ரோன் வைரஸ் பரவல்:

## இரண்டு மூன்று வாரங்களில் நிலைமை மோசமடைய வாய்ப்பு

விசேட மருத்துவ சங்கம் எச்சரிக்கிறது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் ஒமிக்ரோன் திரிபு வைரஸ் பரவும் நிலையில் இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் பெருமளவு தொற்றாளர்கள் 06

## முன்னாள் சுகாதார அமைச்சருக்கு கொவிட்

வீட்டில் தனிமைப்படுத்தல்



ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 06



## யாழ் – கொழும்பு பஸ் மீது தாக்குதல் நடத்தியவர் கைது

03



## வருடத்தின் முதல் 03 தினங்களில் மட்டும் விபத்துகளில் சிக்கி 44 பேர் உயிரிழப்பு

03

## கொலையில் முடிந்த TIKTOK மோதல்: மாணவர் மூவர் உட்பட அறுவர் இதுவரை கைது

03

## நெடுந்தீவு கடலில் மயிரிழையில் தவிர்க்கப்பட்ட பாரிய அனர்த்தம்

03 மணி நேரமாக கடலில் தவித்த 100 பயணிகள் மீட்பு



**யாழ். விசேட நிருபர்**

யாழ். நெடுந்தீவு முதல் குறிகட்டுவானுக்கிடையிலான கடற் போக்குவரத்து சேவையின்போது பாரிய அனர்த்தம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 100 ற்கு மேற்பட்ட 06

மத்திய வங்கியின் பெயரில் பொய்ப்பிரசாரம்

## வங்கிகளில் வலுக்கட்டாய பணப் பரிமாற்றமா?

ஆளுநர் ஆஜித் நிவாட் கப்ரால் மறுப்பு



வங்கிகளின் வாடிக்கையாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள டொலர்களை வலுகட்டாயமாக ரூபாவாக மாற்றுமாறு மத்திய வங்கியினால் நாட்டிலுள்ள ஏனைய வங்கிகளுக்கு எவ்வித 06

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு டொலருக்கு நிகரான ரூபா

240 ரூபாவை வழங்குமாறு நிமல் ஆலோசனை



புலம்பெயர் தொழிலாளர்களினால் இலங்கைக்கு அனுப்பப்படும் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 240 ரூபா வரை அதிகரிக்குமாறு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா 06

### விக்கல் வீராச்சாமி



மாவின் விலை கூடினதால தோட்டங்களில தொழில் செய்கிற குடும்பங்களுக்கு அரசு வழங்கின நிவாரணத்துக்கு நன்றி சொல்ல வேணும்....

மக்களின்ர தேவையறிஞ்சு பணியாற்றுற அரச பாராட்டத்தான் வேணும், 50 ரூபாவ அதிகரிக்க முடியாதவை வாயே திறக்கல பாத்தீங்களே...!!!

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே I நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09
Dialog எதிர்காலம் இன்றே.

# Wise Woman தேசிய வேலைத் திட்டம் ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பம்

## 10 சிறந்த பெண்களுக்கு விருது



பெண்களை முழு ஆற்றலுடன் மேம்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கக் கூடிய வகையிலான Wise Woman தேசிய வேலைத் திட்டம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (04) ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் பெண்களின் சனத்தொகை 52 சதவீதம் ஆகும். ஆனால், மொத்தச் சனத்தொகையில் தொழிற்படைக்கான பெண்களின் பங்களிப்பு 30 சதவீதமென்ற குறைந்தளவு வீதத்திலேயே இருப்பதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. பெண்களுக்கான திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்கி, அதன் மூலம் அவர்களைத் தேசிய பொருளாதாரத்துக்குப் பங்களிக்கச் செய்வதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் மூலம் இது செயற்படுத்தப்படுகிறது.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி நாட்டின் முன்னேற்றத்துக்குப் பங்களித்த பேராசிரியர் நிலீகா மளவிகே, கலாநிதி ஆஷா டி வொஸ், கஸ்தூரி வில்சன், நிபுனி கருணாரத்ன, மெலனி வகஆரச்சி, பவித்ரா குணரத்ன, ரங்கனா வீரவர்தன, அயந்தி குணசேக்கர, நெல்கா ஷிரோமாலா மற்றும் திலங்கா அபேவர்த்தன ஆகியோர், ஜனாதிபதியின் கரங்களினால் சிறந்த பெண்மணிகளாக விருது பெற்றனர்.

எமது நாட்டில் பெண்களைப் பலப்படுத்தும் போது, அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்வதில் எவரும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படவேண்டிய நிலைமை ஏற்படாதென, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

பூமியில் கிடைத்த இரத்தினங்களை விட மெருகூட்டப்பட்டதும் எப்போது கிடைக்கும் என்றே தெரியாத எண்ணெய் சுரங்கங்களை விட மதிப்புமிக்கதுமான பெண் தொழிற்படையினர் நம் நாட்டில் உள்ளனர். தொற்றுப் பரவல் காலங்களில் கூட எழுந்து நிற்கும் வலிமை நம்மிடம் இருக்கிறது என திருமதி சீதா அரம்பேபொல குறிப்பிட்டார்.

அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர்களான விஜித பேருகொட, பியல் நிஷாந்த, தூதுவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பெண்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## மட்டக்குளிய – அங்குலான பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

### ரவிகுமாரின் கோரிக்கைக்கு திலும் அமுனுகம நடவடிக்கை

கொரோனா காலத்தின் பின்னர் கடந்த ஒன்றரை வருடங்களாக மட்டக்குளிய அங்குலான பஸ் சேவை நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இந்த சேவையில் பயணிக்கும் மக்கள் பெரிதும் பாதிப்படைந்து உள்ளதாக அமைச்சருக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிகுமார் நேரடியாக சென்று அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததனைத் தொடர்ந்து அவர் இதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக இந்த இலக்க பஸ் சேவையில் பயணிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி, தேஸ்டன் கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரவிகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம் இந்த பாதை சேவையில் பயணிக்கும் அரசாங்க மற்றும் தனியார்துறை ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரவிகுமார், அமைச்சர் அமுனுகமவுக்கு சுட்டிக்காட்டியுள்ளதனைத் தொடர்ந்து இந்த சேவையினை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் இதற்கான உத்தரவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிறப்பித்துள்ளார்.





ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள DC லங்கா பவுண்டேஷனால் 500,000 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட போது. படம் சுதத் மலவீர

## அமெரிக்காவில் ஒரு மில். தினசரி தொற்று சம்பவம்

உலகில் புதிய சாதனை எண்ணிக்கையாக அமெரிக்காவில் ஒரே நாளில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான கொவிட்–19 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

புத்தாண்டு விடுமுறைக்கு பின்னர் கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவில் 1,082,549 புதிய தொற்றுச் சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக தரவுகள் காட்டுகின்றன. வேகமாகப் பரவக்கூடிய ஒமிக்ரோன் திரிபு அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.



எனினும் முந்தைய அலையுடன் ஒப்பிடுகையில் அண்மைய வாரங்களில் உயிரிழப்பு மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது.

## மாணவனுக்குத் தடுப்பூசி போட்ட ஆசிரியை கைது

சட்டபூர்வ மருத்துவ தகைமை இன்றி மாணவர் ஒருவருக்கு கொவிட் தடுசப்பூசி வழங்கிய குற்றச்சாட்டில் அமெரிக்காவில் பாடசாலை ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லோரா ருசோ என்ற அந்த ஆசிரியை தடுப்பூசி வழங்குவதற்கான சட்டரீதியான அனுமதி அல்லது சிறுவனின் பெற்றோரது ஒப்புதல் இன்றி தனது வீட்டில் வைத்து தடுப்பூசியை வழங்கி இருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



54 வயது உயிரியல் ஆசிரியையான ருசோ புத்தாண்டு தினத்தில் கைது செய்யப்பட்ட நிலையில் அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு முகம்கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## சீனாவில் நிலச்சரிவு: 14 பேர் உயிரிழப்பு

சீனாவின் குய்சோவ் மாகாணத்தின் பிஜி நகரில், கட்டுமானப் பணியின் போது ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர்.

அங்கு மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு வந்த நிலையில், திடீரென நிலச்சரிவு ஏற்பட்டு கட்டுமான தொழிலாளர்கள் 17 பேர் இடிபாடுகளில் சிக்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக் குழுவினர், 14 பேரை சடலமாக மீட்டுள்ளனர்.

படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 3 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த மூவரின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும் பிஜி நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# வடகொரியா ஏவுகணை வீச்சு

பலிஸ்டிக் ஏவுகணை என்று சந்தேகிக்கப்படும் ஏவுகணை ஒன்றை வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் இருந்து ஏவி இருப்பதாக ஜப்பான் மற்றும் தென்கொரியா தெரிவித்துள்ளன.

ஜப்பான் கடலோரக் காவல் படையினரே இந்த ஏவுகணையை முதல் முறை அவதானித்து தகவல் அளித்துள்ளனர். "கடந்த ஆண்டு தொடக்கம் வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணைகளை வீசுவது மிகக் கவலைக்குரியது" என்று ஜப்பான் பிரதமர் பியுமியோ கிசிடா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஏவுகணை சுமார் 500 கிலோமீற்றர் பறந்து ஜப்பானிய பிரத்தியோ பொருளாதார வலயத்திற்கு அப்பால் விழுந்ததாக ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நபுவோ கிஷி தெரிவித்தார்.

இது பலிஸ்டிக் ஏவுகணையாக இருக்கலாம் என்று ஜப்பானால் தெரிவிக்கப்பட்டாலும், இதுவரை ஏவுகணை பற்றிய உறுதிசெய்யப்பட்ட தகவல்கள் வெளியாகவில்லை.

அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறனுடைய ஏவுகணைகள் மற்றும் பலிஸ்டிக் ரக ஏவுகணைகளை வடகொரியா சோதனை செய்ய ஐ.நா தடை விதித்துள்ளது. 2022இல் இது வடகொரியாவுக்கு முதல் ஏவுகணை சோதனையாகும். பொருளாதாரத்தை சீரமைப்பதற்கே இந்தாண்டில் தேசியளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என வடகொரிய தலைவர் கிம் ஜொங் உன் அண்மையில் தெரிவித்திருந்த நிலையில் இந்த ஏவுகணை சோதனை நிகழ்ந்துள்ளது. வடகொரியாவின் அண்மைய ஏவுகணை நடவடிக்கை குறித்துத் தென்கொரியாவும் அமெரிக்காவும் விரிவான ஆய்வை நடத்தி வருகின்றன.




## கசகஸ்தானில் அவசர நிலை

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக கசகஸ்தானில் ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக மாறியுள்ள நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி இரண்டு வாரங்கள் அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளார்.

நாடு முழுவதும் பல பகுதிகளில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டின் மிகப்பெரிய நகரான அல்மட்டியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதோடு வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது.

ஜனாதிபதி காசிம் ஜொமார்ட் டொகாயேவ் பிறப்பித்த ஆணையில், இந்த பதற்றத்திற்கு மத்தியில் அரசாங்கத்தின் விலகலை அங்கீகரிப்பதாக குறிப்பிட்டுள்ளார். பிரதிப் பிரதமரான அலிகான் ஸ்மைலோவை புதிய இடைக்கால பிரதமராகவும் நியமித்துள்ளார்.



## சீனாவின் சியானில் கொவிட்-19 தணிவு

சீனாவின் சியான் நகரில் கொவிட்–19 வைரஸ் பரவல் கட்டுக்குள் வந்துள்ளது.

சுமார் இரண்டு வாரம் கடும் முடக்க நிலையில் இருந்த அந்நகரில் இப்போது நோய்ப்பரவல் குறைந்துள்ளது. நேற்று அங்கு 35 பேருக்கு நோய்த்தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் சியானை ஒட்டிய மற்ற நகரங்களில் வைரஸ் தொற்றுக் கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் அங்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஷெங்சோ நகரில் பகுதிநேர முடக்கநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. சீனா, கொவிட்–19 நோய்த்தொற்றைத் துடைத்தொழிக்க ஆரம்பத்தில் இருந்து கடும் நடவடிக்கைகளை எடுத்துவந்துள்ளது. அடுத்த மாதம் பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி இடம்பெறவிருப்பதால் சீனா மிகவும் கவனமாக உள்ளது.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 6 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.02
லுஹர் - 12.17
அஸர் - 03.38
மஃரிப் - 06.08
இஷா - 07.23

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மார்கழி 22

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)



சுயாதீன தொலைக்காட்சி மற்றும் வசந்தம் ஊடக வலையமைப்பின் புதிய தலைவராக நிரோஷன் பிரேமரத்ன தனது கடமைகளை ஐ.ரி. என் தலைமையகத்தில் (04) பொறுப்பேற்றுக் கொண்டபோது.. (தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்)

# வருடத்தின் முதல் 3 தினங்களில் மட்டும் விபத்துகளில் சிக்கி 44 பேர் உயிரிழப்பு

இந்த வருடத்தின் முதல் 03 நாட்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் சிக்கி 44 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடத்தின் இறுதி 5 நாட்களில் வாகன விபத்துக்களில் சிக்கி 53 பேர் மரணித்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.

சாரதிகளின் கவனயீனமே விபத்துக்களுக்கு காரணம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.



ஈஸ்டர் தின தாக்குதல்:

## சந்தேக நபர் ஒருவர் நோயினால் உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்ட நபரொருவர் விளக்கமறியல் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளதாக பொரளை பொலிஸார் கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு மரணமடைந்துள்ளவர் கல்முனை பள்ளிவீதியை வசிப்பிடமாகக் கொண்ட 42 வயதுடைய சாலி மொஹம்மட் என்பவராவார் என பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

அந் நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது கடந்த நவம்பர் 23ம் திகதி சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த டிசம்பர் 5ம் திகதி மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த அவர், அங்கு மரணமடைந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

# பாடசாலைகள் வழமைக்கு திரும்ப முன்னுரிமை தடுப்பூசி திட்டமே காரணம்

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

தடுப்பூசி ஏற்றுவதற்கு அரசாங்கம் வழங்கிய முன்னுரிமை காரணமாக இன்று பாடசாலைகளை முழுமையாகத் திறக்க முடிந்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் தடுப்பூசிகளுக்கு அதிக முன்னுரிமை வழங்கியதாலும், ஒருங்கிணைக்கப்பட்ட நல்ல ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் இலவச சுகாதார சேவையை நமது நாட்டில் கொண்டிருப்பதாலும் இன்று பாடசாலைகளை திறக்கும் திறன் ஏற்பட்டுள்ளது.

மாலபே மாதிரி ஆண்கள் கல்லூரிக்கான மூன்று மாடிக் கட்டிடத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் வீரவன்ச ,

நமது நாட்டில் கல்வித்துறை பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கி வந்துள்ளது. இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில்,

06



## சதொசவில் தண்ணீர் போத்தல் விற்பனை

### வெற்று போத்தலுக்கு 10 ரூபாய் மீளளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

லங்கா சதொச என்ற பெயரில் குறைந்த விலையில் தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை சதொச நிறுவனம் நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

35 ரூபாவுக்கு இந்த தண்ணீர் போத்தலை விற்பனை செய்வதுடன் வெற்றுப் போத்தலை மீளக் கையளிக்கும் போது நுகர்வோர் பத்து ரூபாயை மீளப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்;

எஸ். எல். எஸ். தர நிர்ணயத்துடன் தண்ணீர் போத்தல் 35 ரூபாவுக்கு நேற்று முதல் சதொச நிலையங்களில் விற்பனை

06

## பஸ் கட்டணங்களில் நேற்று முதல் அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பஸ் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குரவத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் ஆகக் குறைந்த கட்டணமான 14 ரூபா 17 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமான பஸ் கட்டணம் நூற்றுக்கு 17.44 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது தொடர்பான அறிவித்தலை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. போக்குவரத்து சபை மற்றும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான கட்டணப்பட்டியல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ஸ)

# '2000 கோடிக்கு இரத்தினக் கல்லை வழங்க மாட்டோம்'

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய இரத்தினக் கல்லான 'ஆசியாவின் ராணி' என பெயரிடப்பட்ட நீலக்கல்லை 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 2000 கோடி ரூபாவிற்கும் அதிகமான விலைக்கு கொள்வனவு செய்ய டுபாய் நிறுவனமொன்று முன்வந்துள்ளது.

இரத்தினபுரி, பலாங்கொட பிரதேசத்திலுள்ள சுரங்கமொன்றில் இருந்து 310 கிலோகிராம் எடையுடைய 'கொரண்டம்' வகை மாணிக்கக் கல் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.



இந்த நீல நிற இரத்தினக்கல்லை உலக சந்தையில் பலதரப்பட்ட நாடுகள் கொள்வனவு செய்வதற்கு விரும்பம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இது தொடர்பில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கருத்துத் தெரிவித்தபோது, அந்த விலைக்கு இரத்தினக்கல்லை வழங்க இலங்கை தயாராக இல்லை. டுபாய் நாட்டை சேர்ந்த நிறுவனம் ஒன்றே இந்த விலையை அறிவித்திருந்தது.

அதனை விடவும் அதிக விலை எதிர்பார்ப்பில் ஏலத்தில் விடுவதற்கு தீர்மானித்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

## ஒமிக்ரோன் வைரஸ் பரவலை தடுக்க விமான நிலையத்தில் விசேட திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஒமிக்ரோன் வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அது தொடர்பான விசேட பாதுகாப்பு வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்: நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகின்ற விமானப் பயணிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான தீர்மானத்தை சுகாதாரத்துறை முக்கியஸ்தர்கள் மேற்கொண்டுள்ளனர். அதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஒமிக்ரோன் வைரஸ் மிக வேகமாக பரவுவதைக் கவனத்தில் கொண்டு இந்தியாவின் புதுடில்லி நகரம் மற்றும் மும்பாய் நகரம் ஆகியவற்றில் அந்தப் பிரதேச அதிகாரிகளின் தீர்மானத்துக்கமைய ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ)

கொலையில் முடிந்த TIKTOK மோதல்:

# மாணவர் மூவர் உட்பட அறுவர் இதுவரை கைது

## கிராண்ட்பாஸ் பொலிஸார் தீவிர விசாரணை

டிக் டொக் (TIK TOK) சமூக ஊடக வலையமைப்பில் வீடியோ பதிவேற்றம் தொடர்பாக ஏற்பட்ட மோதலால் கொழும்பு , கிராண்ட்பாஸ் பகுதியில் 17 வயது அப்துல் லத்தீப் என்ற சிறுவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மாணவர்கள் மூவர் உட்பட, அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



நேற்று முன்தினம் (04) கைதுசெய்யப்பட்ட இவர்கள் அனைவரும் 16 மற்றும் 17 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் பொலிஸார் தெரிவித்தனர். ரந்திய உயன தொடர்மாடி குடியிருப்புக்கு தனது நண்பர்களுடன் குறித்த இளைஞன், மோட்டார் சைக்கிளில் ஜனவரி 3ஆம் திகதி சென்றுள்ளார்.

அவர்களை பின்தொடர்ந்து வந்த மற்றுமொரு தரப்பினர், டிக் டொக் வீடியோ தொடர்பில் வாக்குவாத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பின்னர், மறைத்து வைத்திருந்த கத்தியால் அவ்விளைஞனின் அடிவயிற்றில் குத்தியுள்ளனர்.

அதன்பின்னர், அங்கிருந்து அவர்கள் தலைமறைவாகிவிட்டனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என தெரிவித்த கிராண்ட்பாஸ் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையிலேயே மேற்படி அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# யாழ். - கொழும்பு பஸ் மீது தாக்குதல் நடத்தியவர் கைது


யாழ்ப்பாணம் – கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மீது தாக்குதல் நடத்தியதுடன் சாரதி மற்றும் நடந்துனர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி சந்திக்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு வேளை குறித்த பஸ்ஸை இடைமறித்த கும்பல் ஒன்று பஸ் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், சாரதி மற்றும் நடத்துனர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதில் சாரதி மற்றும் நடத்துனர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், ஏனைய நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.




அதேவேளை , பருத்தித்துறை – திருகோணமலைக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மீது , நெல்லியடி புறாப்பொறுக்கி சந்தி பகுதியில் வைத்து இனம் தெரியாத கும்பல் கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நேற்று (புதன் கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த தாக்குதல்

06


## மரண அறிவித்தல்

மலர்வு: 24/06/1936



உதிர்வு: 05/01/2022

### மகாலட்சுமி சச்சிதானந்தன்

காலஞ்சென்ற நவாலியூர் நாகலிங்கம் சச்சிதானந்தனின் மனைவி மகாலட்சுமி சச்சிதானந்தன் நேற்று புதன்கிழமை (05/01/2022) அதிகாலை இயற்கை எய்திவிட்டார். இவர், காலஞ்சென்ற துரையப்பா காராளசிங்கம் (தபால் அதிபர் -பலாங்கொடை/ இரத்தினபுரி) தெய்வானையம்மா தம்பதியின் மூத்த மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகலிங்கம், ஆச்சிமுத்து தம்பதியின் மருமகளுமாவார்.

இவர், பிரேமவர்தன, பிரியதர்ஷினி, காலஞ்சென்ற பிரதாபன், பிரேமரூபன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஷீலா, குமார், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷ்மி, அருந்திகா, டிலுஷா, அஷ்விகா, ஹிரான், சேஷன், ரக்தி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை ஒன்பது மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரிகைகளின் பின்னர் மாலை 4.45 மணியளவில் கனத்தை மயானம் இந்து பிரிவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: பிரேமரூபன் (மகன்) - 0773558888**

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 02

## குறள் தரும் சிந்தனை



அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

இருப்பது, இயற்றக் கூடியது, இனியும் ஈட்டக் கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பது போல் தோன்றினாலும் கூட அவை இல்லாமல் மறைந்து போய் விடும்.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு தேடுவதன் அவசியம்

கொவிட் 19 தொற்றின் விளைவாக தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. சேவைகளுக்கான கட்டணங்களும் அதிகரித்துள்ளன. இந்த நிலைமைக்கு உலகின் எல்லா நாடுகளுமே முகம்கொடுத்துள்ளன.

ஆனாலும் இந்நாட்டின் எதிரணியைச் சேர்ந்த சிலர் இந்நெருக்கடி இலங்கையில் மாத்திரம் ஏற்பட்டிருப்பது போன்று விமர்சனங்களைத் தெரிவிக்கின்றனர். இவர்கள் கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார நெருக்கடியின் உண்மைத் தன்மையை உரிய முறையில் அறிந்து கொள்ளாதவர்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இப்பொருளாதார நெருக்கடியானது, மக்கள் மீது வாழ்வாதார சுமையை ஏற்படுத்தி இருக்கின்றது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வரும் இந்த அரசாங்கம் இப்பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பதிலும் விஷேட கவனம் செலுத்தியுள்ளது.

இந்த நிலையில் புத்தாண்டின் தொடக்கத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களைப் பாதுகாக்கவென நிவாரணம் அளிப்பதற்கான திட்டங்களை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெளிவாக எடுத்துக்கூறினார்.

அந்த அடிப்படையில் அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள், சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்கள், ஊனமடைந்துள்ள படைவீரர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட நாட்டில் வாழும் சகல மக்களும் நன்மைகள் பெற்றுக் கொள்ளும் வகையில் 229 பில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிவாரணப் பொதிக்கான அறிவிப்பையிட்டு எதிரணியைச் சேர்ந்தவர்களும், அரசாங்கத்தை விமர்சிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள சிலரும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்தைக்கும் உள்ளாகியுள்ளனர். ஏனெனில் கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள தாக்கத்தையும் பாதிப்புகளையும் அறிந்து கொள்ளாமையின் வெளிப்பாடே அதுவாகும். இத்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் பாதிப்புகளையும் இவர்கள் உண்மையாகவே அறிந்து கொள்வார்களாயின் இப்பொருளாதார நெருக்கடிக்காக அரசாங்கத்தை இலக்கு வைத்து விமர்சனங்களை மேற்கொள்ள மாட்டார்கள்.

கொவிட் 19 தொற்று சவாலுக்கு மத்தியில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நாட்டில் சிறந்த நிதிமுகாமைத்துவத்தை மேற்கொண்டு வருகின்றது. வீண் விரயம், மோசடிகள் பெரிதும் குறைக்கப்பட்டு சிரமங்களுக்கு மத்தியில் பொருளாதாரமும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக கடந்த ஆறு மாத காலப்பகுதியில் அமைச்சுக்களின் ஊடாக 53 பில்லியன் ரூபா மீதப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் இத்தொற்று அச்சுறுத்தல் காரணமாக நாட்டுக்கு வருமானம் கிடைக்கப் பெறும் துறைகளின் ஊடாக எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாததால், 14 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளின் வருகை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோர், உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறைகள் என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி இந்த நஷ்டத்திற்கு பெரிதும் பங்களித்துள்ளது.

இவ்வாறான காரணங்களின் விளைவாகவே நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இந்த உண்மை நிலைமையைப் புரிந்து கொள்ளாது விமர்சனங்கள் செய்து கொண்டிருப்பதன் மூலம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. இப்பொருளாதார நெருக்கடியின் உண்மைத்தன்மையைப் புரிந்து கொண்டு அதிலிருந்து மீட்சி பெறுவதற்காக இலங்கைப் பிரஜை என்ற வகையில் ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும். குறிப்பாகப் இப்பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள 'பொருட்களின் விலையேற்றத்தைக் குறைப்பதற்கு பங்களிக்கும் வகையில் வீட்டுத் தோட்டங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு நல்க முன்வர வேண்டும். இத்திட்டத்தற்கென அரசாங்கம் 31 பில்லியன் ரூபாவை செலவிட உள்ளது' என்று நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டிருக்கின்றார். இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய அறிவிப்பாகும். இத்திட்டத்திற்கு பங்களிப்பதை ஒவ்வொருவரும் தமது பொறுப்பாகக் கருத வேண்டும்.

அதேநேரம் உல்லாசப் பயணிகளின் வருகையும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் இந்த அதிகரிப்பை அவதானிக்க முடிகிறது. ஆகவே கொவிட் 19 தொற்றினால் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்காக நாடு என்ற வகையில் ஒவ்வொரு பிரஜையும் பங்களிக்க வேண்டும். அதுவே இன்றைய அவசரத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# சவால்களை முறியடித்து, மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டவர் அருள்சாமி



## அன்னாரின் மூன்றாவது சிரார்த்ததினம் இன்று

மலையக தொழிற்சங்க வரலாற்றில் புகழோடு பணியாற்றிய அமரர் அருள்சாமியின் மூன்றாம் ஆண்டு சிரார்த்த தினம் (06.01.2022) இன்றாகும். தனது சமூகத்துக்கு எத்தனை பெரிய துன்பங்கள், துயரங்கள், எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றை அமைதி வழியில் நின்று போராடி வெற்றி கொள்ள முடியும் என்பதை நிரூபித்தவர் அமரர் அருள்சாமி.

43 ஆண்டுகள் அரசியல், தொழிற்சங்க பணியாற்றி வந்த அருள்சாமி அமரர் தொண்டமானின் அரசியல் பாசறையில் வளர்ந்தவர். 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நுவரெலியா – மஸ்கெலியா தொகுதியில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் போட்டியிட்ட வேளையில், அவரது வெற்றியை உறுதி செய்ய காரணமாக இருந்தவர் அருள்சாமி. சமுதாயம் மீது அவர் அக்கறையுள்ளவர். மற்றையோரை மதிக்கும் உயரிய பண்பு அவரிடம்இருந்தது.

மும்மொழியிலும் சரளமாகப் பேசக் கூடிய புலமையைப் பெற்றிருந்தவர் அவர். தொழிற்சங்கப் போராட்டங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றிய செயல் வீரர்.

மத்திய மாகாணத்தில் 1988 ஆம் ஆண்டு முதலாவது மாகாணசபையில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அடுத்து வந்த மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன், மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டவர். இக்கால கட்டத்தில் மலையக பாடசாலை அபிவிருத்தியிலும் மாணவர் முன்னேற்றத்திலும் முன்னிறு உழைத்தவர் என்ற பெருமை அருள்சாமியை சாரும்.

நீண்ட கால தொழிற்சங்க அனுபவமும் நிர்வாகத்திறனும் வாய்ந்தவர். மலையக தொழிற்சங்க வரலாறு பற்றி பேசும் போது அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் தோளோடு தோள் நின்று செயற்பட்டவர்களில் அமரர் அருள்சாமி முக்கியமானவர். அவர் இ.தொ.காவில் உதவி மாவட்ட பிரதிநிதியாக, மாவட்ட பிரதிநிதியாக, தொழிலுறவு அதிகாரியாக, பிராந்திய இயக்குனராக, உபதலைவராக பல வருடங்கள் பணியாற்றியவர். அக்காலங்களில் தொழிற்சங்க பிணக்குகளையும் பிரச்சினைகளையும் அவர் கையாண்ட விதம் இ.தொ.காவுக்கு பெருமை சேர்த்ததாகவே விளங்கியது.

தனது 16வது வயதில் இ.தொ.காவில் இணைந்து கொண்ட அவர், அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான தொழிற்சங்கத்தில் பயணத்தை ஆரம்பித்தார். அரசியல், தொழிற்சங்கம் ஆகிய இரண்டு துறைகளிலும் பிரகாசித்த அமரர் அருள்சாமி 80களில் சர்வதேச மகாநாடுகளிலும் கலந்து கொண்டு பல்வேறு விடயங்களை சாதித்து காட்டினார்.

நிதானம், அமைதி, ஆழமான சிந்தனை உணர்வு கொண்டவர். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கருத்துணர்ந்து எதனையுமே ஆக்கபூர்வமாக கையாள்வதில் சமர்த்தராக விளங்கினார். தொழிலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட சேவையாளர்களுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தியவாறு அவர்களின் நம்பிக்கைக்குரியவராக செயற்பட்டார்.

தேசிய அரசியலில் பிரகாசித்த அவர் பேச்சாளர், செயல்வீரர் என போற்றப்பட்டவர். மத்திய மாகாண சபை உறுப்பினராகவும், அதன் பின்னர் தமிழ்க் கல்வி அமைச்சராகவும் இருந்ததுடன் பல்வேறு சமூக அமைப்புகளோடும் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

தமிழ்க் கல்வி அமைச்சராக மத்திய மாகாணத்தில் இருந்த பொழுது மலையக கல்வித்துறையில் புரட்சியை ஏற்படுத்தினார். அமரர் ஆறுமுகன் தொண்டமானோடு இணைந்து 3179 ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு பாடுபட்டார். இரு தடவை மத்திய மாகாண தமிழ் சாஹித்திய விழாக்களை நடத்தி கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பெருமை சேர்த்தவர் அருள்சாமி. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர்சபை பணிப்பாளராகவும் தலைவராகவும் பணியாற்றிய அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதியின் கூட்டிணைப்பு பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இ.தொ.கா. நடத்திய தொழிற்சங்கப் போராட்டங்களில் அவரது பங்களிப்பு பாரியது. அவரே பல போராட்டங்களை நெறிப்படுத்தியிருந்தார். அவரது பேச்சு தொழிலாளர்களை உற்சாகப்படுத்தியது. சுமார் 50 ஆண்டு காலம் அமரர் தொண்டமானோடு பயணித்த அவர், நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் பாத்திரமாகவும் செயற்பட்ட அவர், தனது 59வது வயதில் காலமானார்.

மலையக மக்களின் சமூக அரசியல் துறைகளில் மாற்றம் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில், அவரது இழப்பு மலையக சமூகத்திற்கு மட்டுமின்றி, கிராமப்புற மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

**தேவதாஸ் சவரிமுத்து...**
ஊடக இணைப்பாளர்,
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

# சாகித்திய ரத்னா தெணியானுக்கு இன்று 80 ஆவது பிறந்த தினம்

வடமராட்சி பொலிகண்டியில் கந்தையா_ சின்னம்மா தம்பதியருக்கு 06.01.1942 இல் பிறந்த நடேசன், இலக்கிய உலகில் பிரவேசித்ததும் 'தெணியான்' என்ற பெயரில் எழுதத் தொடங்கினார். கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்று பின்னாளில் அங்கேயே நீண்ட காலம் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் எழுத்தாளர் தெணியான். மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் சில நாவல்களையும் சில விமர்சனக் கட்டுரைத் தொகுதிகளையும் படைத்துள்ள தெணியானின் 'பாதுகாப்பு' என்ற சிறுகதை தற்போது இலங்கைப் பாடசாலைகளில்11 ஆம் தரம் மாணவர்களுக்கான தமிழ்ப் பாட நூலிலும் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளியான 'விவேகி' இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை 'பிணைப்பு' வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து மல்லிகை, ஞானம், யாழ். முரசொலி, தினகரன், வீரகேசரி, தினக்குரல், ஜீவநதி உட்பட பல இதழ்களில் தொடர்ந்து எழுதினார்.

தெணியானின் கழுகுகள் (நாவல்), சொத்து (சிறுகதைத் தொகுதி), குடிமைகள் (நாவல்) என்பன தமிழ் நாட்டில் பதிப்பிக்கப்பட்டு, தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ். கிளையின் செயலாளராகவும் செயற்பட்டவர். தேசிய சாகித்திய விருது, வடக்கு, கிழக்கு மகாண அமைச்சுப் பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான 'சாகித்திய ரத்னா' விருதும் பெற்றிருப்பவர்.



## அறுபது வருடங்களுக்கு மேலாக அயராது எழுத்துப் பணியை தொடரும் மூத்த முற்போக்கு எழுத்தாளர்

இலங்கை வானொலியிலும் இவரது சில நாடகங்கள் ஒலிபரப்பாகியுள்ளன. தெணியான், பேராசிரியர்

கா. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் நூல்களை எழுதியுள்ளார். 'மரக்கொக்கு' நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. விடிவை நோக்கி, பொற்சிறையில் வாடும் புனிதர்கள், ஏதனம் முதலான நாவல்களும் குறிப்பிடத்தகுந்தன.

1964 ஆம் ஆண்டு முதல் ஏறக்குறைய ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அயராமல் எழுதி வரும் தெணியானுடைய மணிவிழா காலத்தில் (2003 ஆம் ஆண்டில்) மணிவிழா சிறப்பு நூல் வெளிவந்திருக்கிறது.

மல்லிகை, ஞானம், கனடா காலம் முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாக பாராட்டி கௌரவித்துள்ளன. இன்று அவர் தனது எண்பதாவது அகவையில் கால்பதித்துள்ளார். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலக்கிய ஆர்வலர்கள் பலரும் தெணியானுக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளனர்.

**முருகபூபதி...**
அவுஸ்திரேலியா

# ஜெயலலிதாவின் இல்லம் வாரிசுகளுக்கே சொந்தம்

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான போயஸ் கார்டன் தோட்டத்தில் உள்ள 'வேதா நிலையம்' வீட்டை நினைவு இல்லமாக மாற்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக அந்த வீட்டை கையகப்படுத்தியும், அதற்கான இழப்பீடு நிர்ணயித்தும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா, அண்ணன் மகன் தீபக் ஆகியோர் தனித்தனியாக வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி என்.சேஷசாயி கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி தீர்ப்பு வழங்கினார். அதில் ஜெயலலிதாவுக்கு ஏற்கனவே சென்னை மெரினா கடற்கரையில் நினைவிடம் உள்ளது. அதற்காக அரசு பெரும் தொகை செலவு செய்துள்ளது.

இந்த நிலையில் ஜெயலலிதாவுக்கு மக்கள் வரிப்பணத்தில் பெரும் தொகையை செலவு செய்து மற்றொரு நினைவு இல்லம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே அரசின் அனைத்து அரசாணைகளையும் ரத்து செய்கிறேன் என்று தீர்ப்பளித்திருந்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். அதில், “ஜெயலலிதா பொது வாழ்க்கையில் பல சாதனைகள் செய்தவர். குறிப்பாக பெண்களுக்காக பல நலத் திட்டங்களை கொண்டு வந்தார். அவரது சாதனைகளை எதிர்கால தலைமுறைக்கு தெரியப்படுத்தும் விதமாக இந்த நினைவு இல்லத்தை அமைக்க அப்போதைய அரசு முடிவு செய்தது. இதற்காக ஜெயலலிதாவின் சட்டப்படியான வாரிசுகளுக்கு இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே அரசின் நடவடிக்கைகளில் எந்த தவறும் இல்லை. எனவே தனி நீதிபதியின் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும்" என்று கூறி இருந்தார்.

இந்த மேன்முறையீட்டு வழக்கை நீதிபதிகள் பரேஷ் உபாத்யாய், சக்திகுமார் சுகுமார குரூப் ஆகியோர் விசாரித்தனர்.





## அ.தி.மு.க உரிமை கொண்டாட முடியாது!

### நீதிமன்றம் உத்தரவு

இந்த வழக்கில் திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை நீதிபதிகள் தள்ளி வைத்தனர். இந்த நிலையில் இந்த வழக்கில் நேற்று தீர்ப்புக் கூறப்பட்டது. அ.தி.மு.க. மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரசியல் நோக்கத்துக்காகவே ஜெயலலிதா இல்லம் கையகப்படுத்தப்பட்டது என்று நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் தெரிவித்தனர்.

திருச்சி
**எம்.கே.சாஹுல் ஹமீத்...**




## கண்டி- கலஹா

# வீதியிலுள்ள பாலம் சேதமடைவதால் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் மக்கள்

கண்டி, கலஹா வீதியிலுள்ள பாலம் கடந்த மாதம் பெய்த தொடர் மழையால் பாலத்தின் ஒரு பகுதி தாழிறங்கி ஆற்றில் வீழ்ந்துள்ளது.

கலஹாவிலிருந்து ஹந்தானை ஊடாக கண்டிக்கு செல்லும் பாதையில், கலஹா பிரிவிலேயே இப்பாலம் அமைந்துள்ளது. இப்பாலமானது ஆங்கிலேயர் காலத்தில் 1880 ஆம் ஆண்டில் கம்பிகளைக் கொண்டு கொங்கிரீட்டினால் கட்டப்பட்டதாகும்.

கண்டி கலஹா பிரிவில் அமைந்துள்ள இந்த பாலம் கடந்த 15 வருடங்களுக்கு முன் ஓரளவு பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டது. அக்காலப் பகுதியில் பார ஊர்திகளும் பஸ்களும் பாலத்தின் ஊடாக பயணிப்பதற்கு தயக்கம் காட்டின. பின்னர் ஓரிரு சிறு திருத்த வேலைகளோடு பாலத்தின் செயற்பாடு ஆரம்பித்து, வழமைப்போல் இப்பாலத்தை பயன்படுத்தி வந்தனர்.



இருப்பினும் குறுகிய காலத்தில் விடாது பெய்த மழையால் பாலத்தின் ஒரு பகுதி ஆற்றில் உடைந்து விழுந்துள்ளது. அத்தோடு பாலத்தைத் தாங்கி கொண்டிருக்கும் இரும்பு தூண்களும் துருப்பிடித்துள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இப்பாலத்தினூடாகவே பயணிக்கின்றனர். நகர மக்கள் இந்தக் பாலத்தின் ஊடாகவே தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். கலஹா, ஹந்தாணை, அப்பர் கலஹா, கித்துல்முல்ல, தெல்தோட்டை, பத்தனை, புப்புரஸ்ஸ, தலாத்தோயா, முல்லோயா, கம்பளை போன்ற பல இடங்களிலுள்ள மக்கள் இப்பாலத்தையே பயன்படுத்துகின்றனர்.

கண்டி பெரிய வைத்தியசாலை, ஏனைய தனியார் வைத்தியசாலை, தெல்தோட்டை மற்றும் ஆரேக்கர் வைத்தியசாலைகளுக்கும் செல்ல வேண்டுமென்றால் இப்பாலத்தை கடந்தே செல்ல வேண்டும். மேலும் கண்டி ஸ்ரீ ராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, பத்ராவதி பாடசாலை, கலைமகள் மற்றும் மலைமகள் போன்ற பாடசாலை மாணவர்களும் செல்கின்றனர்.

அதுமாத்திரமன்றி கலஹாவிலிருந்து பேராதனையூடாக கண்டி நகருக்கு செல்ல இருபத்தி ஏழு கிலோ மீட்டராகும். அதுவே கலஹாவிலிருந்து ஹந்தானையூடாக கண்டி செல்வதற்கு 17 கிலோ மீட்டர் தூரமே ஆகும். எனவே கண்டி செல்வதற்கு ஹந்தானை பாதையை பயன்படுத்துபவர்கள் இப்பாலத்தை கடந்து செல்ல வேண்டியுள்ளது.

இப்பாலம் சிதைவடைந்து காணப்படுவதன் காரணமாக இப்பாலத்தை பயன்படுத்தும் மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தகுந்த அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு பாலத்தை புனர்நிர்மாணம் செய்யுமாறு கோருகின்றனர்.

**ரமேஷ் ரெஜீனா**
நான்காம் வருடம்
ஊடக கற்கை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# தொழிலாளர்கள் விடயத்தில் கடந்தாண்டில் பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்துள்ளோம்

## தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா

**நுவரெலியா தினகரன் நிருபர்**



2021 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சு தொழிலாளர்கள் விடயத்தில் பல வெற்றிகளை பெற்றுக் கொண்டுள்ளதென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தெரிவித்தார்.

சுபீட்சத்தை நோக்கி எனும் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைய அரச தனியார் துறையில் கடமையாற்றுபவர்களின் தொழில் பாதுகாப்பை ஏற்படுத்தல் நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான பங்கு வகிக்கின்ற தொழில் புரிகின்ற தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தியுள்ளது.

தொழில் அமைச்சு என்ற வகையில் 2021 ஆம் ஆண்டு பல முன்னேற்பாடுகளை தான் மேற்கொண்டுள்ளதாகவும் அவற்றின் சிறந்த பலன்களை தற்பொழுதும் தொழிலாளர்கள் அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் தொழில் அமைச்சு மேற்கொண்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக தெளிவுபடுத்துகின்ற பொழுதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேசிய ரீதியில் ஆகக் குறைந்த சம்பளமாக இருந்த 10,000 ரூபாவை 12,500 ரூபாய் வரை அதிகரித்துள்ளமை. பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஆகக் குறைந்த சம்பளமாக நாட்சம்பளம் 1000 ரூபாவாக அதிகரித்துள்ளமை தனியார் துறையினரின் ஓய்வு காலத்தை 60 வயது வரை அதிகரித்துள்ளமை தொழிலை நிறைவு செய்கின்ற பொழுது வழங்கப்படுகின்ற 12 இலட்சத்தை 25 இலட்சம் வரை அதிகரித்துள்ளமை போன்ற விடயங்களை கடந்த வருடத்தில் பெற்றுக் கொடுத்தமை பாரிய ஒரு வெற்றியாக அமைந்துள்ளது என்றார்.

# நிககொள்ள – பதிங்கஸ்கொடுவ வீதியின் அவலம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

யடவத்தை பிரதேச சபைக்குட்பட்ட நிககொள்ள பதிங்கஸ்கொடுவ வீதியின் இருமருங்கிலும் மண்ணைக் கொண்டு அமைக்கப்பட்ட நடைபாதை, மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டு பாதை முழுவதும் சேறும் சகதியுமாக காணப்படுகிறது.

இதனால் இப்பாதையில் நடந்து செல்லும் பொதுமக்கள் பலர் அடிக்கடி வழுக்கி விழும் நிலை ஏற்பட்டுள்ளதோடு வாகன விபத்துகளும் இடம்பெற்று வருகின்றன.

கிரவல் மண்ணுக்கு பதிலாக சேற்று மண்ணைக் கொண்டு நடைபாதை அமைக்கப்பட்டுள்ளதால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

# தபால் விநியோகத்தில் முறைகேடு: ஊழியர் பணி நீக்கம்



**மாத்தளை சுழற்சி நிருபர்**

தபால் விநியோகத்தில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட தபால் ஊழியர், மாத்தளை பிரதான தபால் நிலைய பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். உக்குவளை தபால் நிலையத்தில் சேவையாற்றி வரும் ஊழியர் ஒருவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

உக்குவளை தபால் நிலையத்தில் சேவையாற்றி வரும் இந்நபர், அப்பிரதேச மக்களுக்கு வரும் கடிதங்களை வழங்காது, தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டிருந்த கடிதங்கள் நேற்று முன்தினம் (4) அப்பகுதி வீடொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேர்முக தேர்வு கடிதம், வங்கி கடிதம், ஓய்வூதிய கடிதம் உள்ளிட்ட பல கடிதங்கள் குறித்த நாளில் கிடைக்காமையினால், அப் பிரதேசவாசிகள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

# பெரனிம் கொங்ரீட் பிரிவு திறந்து வைப்பு



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் கொடக்கவெல பெரனிம் கொங்ரீட் பிரிவு நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு நேற்று முன்தினம் (4) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் திறந்து வைக்கப்படடது.

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநரினால் 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான கொங்கிரீட், பிரிவுக்கு தேவையான இயந்திர உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், பிரதி செயலாளர்களான அஜித் பனாகொட, பராக்கிரம பியசேன, சப்ரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரூபசிங்க உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# திட்டமிட்டபடி அக்கரபத்தனை சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறும்

**நுவரெலியா தினகரன் நிருபர்**

எத்தனை இடையூறுகள் வந்தாலும் திட்டமிட்டபடி அக்கரபத்தனை சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய நிர்வாக சபையின் செயலாளர் சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

எங்களுடைய அக்கரபத்தனை நகரில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி கும்பாபிஷேகத்தை நடாத்துவதற்கு ஆலய நிர்வாக சபையும் பொது மக்களும் தேவையான ஏற்பாடுகளை செய்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இனந்தெரியாத நபர்களால் ஆலயத்தின் சிற்பங்களும் சிலைகளும் சேதமாக்கப்பட்டன.

இது தொடர்பாக ஆலய நிர்வாக சபையினர் அக்கரபத்தனை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதன் காரணமாக பொலிஸார் தற்பொழுது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. இந்த சம்பவத்தின் மூலமாக எங்களுடைய ஆலயத்தில் நடைபெற இருந்த கும்பாபிஷேக நிகழ்வை தடுத்து நிறுத்த முடியும் என யாரும் நினைத்திருந்தால் அது அவர்களின் அறியாமையாகும்.

நாங்கள் திட்டமிட்டபடி எதிர்வரும் 19 ஆம் திகதி பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டு 23 ஆம் திகதி கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு ஆலய நிர்வாக சபை தீர்மானித்திருக்கின்றது. அதன்படி தற்பொழுது வேலைகள் துரிதமாக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட அனைத்து சிற்பங்களையும் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பஸ் சாரதிகளுக்கிடையில் மோதல்: ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

**பதுளை விசேட நிருபர்**

ஹல்துமுல்லையில் நேற்று (5) இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிக்கும், தனியார் துறை பஸ் சாரதிக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், இ.போ.ச. பஸ் சாரதி கடும் காயங்களுக்குள்ளாகி ஹல்துமுல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

ஹல்துமுல்லை பொலிஸார் ஸ்தலத்திற்கு விரையும் முன் தனியார் பஸ் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில், தற்போது தனியார் பஸ் சாரதி கொழும்பில் இருப்பதாகவும் பஸ் சாரதியையும் நடத்துனரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், ஹல்துமுல்லை பொலிசார் தெரிவித்தனர். படல்கும்பரையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இ.போ.ச. பஸ் சாரதி பாதிக்கப்பட்டவராவார்.

இரு பஸ் சாரதிகளும் போட்டி போட்டு பயணிகளை ஏற்றிச் சென்ற வேளையில் இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு மோதல் இடம் பெற்றது.

தனியார் பஸ் சாரதியும் நடாத்துனரும் இ.போ.ச. பஸ் சாரதியை கடுமையாகத் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர் என்று விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. மேலும் நேரசூசியில் ஏற்பட்ட குளறுபடியே இச்சம்பவத்திற்கு காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சப்ரகமுவ மாகாணத்தில் 1030 மில்லியன் ரூபாய் முத்திரை வருமான வரி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

சப்ரகமுவ மாகாண வருமான திணைக்களத்திற்கு 2020 ஆம் ஆண்டில், முத்திரை வருமான வரியாக 1030 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாக மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

மாகாண வருமான திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருட இறுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண வருமான திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி நந்தனி குணவர்தன உரையாற்றுகையில்,..

கொவிட் தொற்று ஏற்பட்ட கால கட்டத்தில் அதிகளவு அர்ப்பணிப்புடனும், நிர்வாகத்திறமையுடனும் பணிகளை மேற்கொண்டமையாலே இந்த வருமானத்தை பெற்றுக் கொள்ள எமது திணைக்களத்திற்கு முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், பிரதி செயலாளர் (நிதி) பிரியந்த விஜேசுந்தர உட்பட மேலும் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நிவாரண பொதிக்கான பணம் தொடர்பில் நிதி அமைச்சர் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்

## தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க

**எம்.ஏ.அமீனுல்லா**

நிவாரணங்கள் வழங்குவதற்கும் சம்பள அதிகரிப்புக்கும் எவ்வாறு பணம் கிடைக்கும் என்பதை நிதி அமைச்சர் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நேற்று (05) மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கேட்டார்.

தொடர்ந்துரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க, டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த நிதியாண்டிற்கு எந்த வகையில் பணம் பெற்றுக்கொள்ள மற்றும் செலவழிக்க வேண்டும் என்பது கடந்த 10ம் தேதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பின்னர் நாங்கள் பாரிய நிதி நெருக்கடியில் இருப்பதாகவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் நிவாரணப் பொதியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த சம்பள அதிகரிப்பு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான பணத்தை எவ்வாறு திரட்டுவது என்பதை நிதியமைச்சரிடமிருந்து அறிய விரும்புகின்றோம். அறியும் உரிமை பாராளுமன்றத்திற்கு உள்ளது. நிவாரணம் வழங்குவது பற்றி அல்ல, அதற்கான பணத்தை எவ்வாறு திரட்டுவது என்பதுதான் பிரச்சினை.

இந்த நிவாரணங்களை வழங்க மீண்டும் மீண்டும் அச்சடிக்கும் திட்டத்திற்குச் செல்வது பல நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும். நமது நாட்டில் பல பாரிய நெருக்கடிகள் உருவாகியுள்ளன. இந்த அரசியல் பாதை மாற்றப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு யுத்தமே காரணம் என்று பல தசாப்தங்களாக நாம் கூறி வந்தோம். இந்நிலையில் தற்போது இந்த பொருளாதார நெருக்கடிக்கு முழு காரணம் கொரோனா தான் என்று கூறப்படுகிறது. இது தவறு..

கொரோனா ஆரம்பித்த போதும், நமது பொருளாதார வளர்ச்சி விகிதம் எதிர்மறையாக இருந்தது. நீண்ட கால அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளால் இந்த நாடு படுகுழியில் தள்ளப்பட்டுள்ளது. இந்த அழிவுகரமான அரசியல் மற்றும் பொருளாதாரப் பயணத்தை நிறுத்த மக்கள் ஒன்றுபடுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன். இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பவே அரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றோம்.




பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினூடாக, பதுளை தெல்பெத்தை கலைவாணி தமிழ் வித்தியாலயத்திற்கு ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரமொன்றும், பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு ஒன்றரை இலட்சம் பெறுமதியான போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரமொன்றும், வைப ரீதியாக வழங்கி வைக்கப்பட்ட போது,... படம் பதுளை தினகரன் விசேட நிருபர்

## 20 ஐ இரத்து செய்ய...

19வது அரசியலமைப்பு திருத்தத்தின் குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் அதனை கொண்டு வருவது அவசியம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனிக் கட்சி ஒன்றுக்கு மீண்டும் அரசாங்கத்தை உருவாக்க முடியாது என தெரிவித்துள்ள அவர், ஊழல் மோசடிகளற்ற புதிய கூட்டணி அரசாங்கம் ஒன்றின் கீழ் நாட்டில் தேசிய கொள்கை ஒன்றை உருவாக்கி புதிய பயணத்திற்கு தலைமைத்துவம் வழங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபை முதல் பாராளுமன்றம் வரை அனைத்து இடங்களிலும் திருடர்கள் உள்ளனர். அவர்கள் மக்களுக்கான சேவையை கமிஷன் பெற்றுக் கொண்டே மேற்கொள்கின்றனர்.

பிரதேச சபைகளில் மணல் மூலம் கமிஷன்களை பெறுபவர்கள் பாராளுமன்றத்திற்கு சென்றதும் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களின் டெண்டர்களில் கமிஷன் பெறுகின்றனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட சம்மேளனத்தின் போது கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.(ஸ)

## தமிழகத்திலுள்ள இலங்கை...

திகதி வரையிலான நிலவரப்படி, 18,937 குடும்பங்களைச் சேர்ந்த 58,668 இலங்கைத் தமிழர்கள் முகாம்களிலும், 13,553 குடும்பங்களைச் சேர்ந்த 34,123 பேர் முகாம்களுக்கு வெளியிலும் வாழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முகாம்களுக்கு உள்ளேயும், வெளியேயும் வாழும் இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு, குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளை வழங்குவது தொடர்பிலும், எத்தனை பேர் இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றனர் என்பது குறித்தும் இந்த ஆய்வு நடத்தப்படுகிறது.

தமிழக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழு, கடந்த வாரம் முதல் முறையாகக் கூடி குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

சுதந்திரத்தின் பின்னர், இந்தியாவுக்கு வந்த இலங்கையர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களில் எத்தனைப் பேர் இந்தியக் குடியுரிமையைப் பெற்றுள்ளனர் போன்ற தகவல்களை இந்திய மத்திய உள்துறை அமைச்சு மற்றும் தமிழக அரசாங்கம் ஆகியவற்றிடம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக, அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி இந்திய ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுகளின் பின்னர், இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்காக, 2019 குடியுரிமை திருத்தச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசிடம், மாநில அரசு கோரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத் தளபதியுடன் பீல்ட் மார்ஷல் அரிய சந்திப்பு



இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் அரிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 563வது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பண்டுக பெரேராவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு ஜெனரல் சவேந்திர சில்வா மரியாதை செலுத்தியதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லேரியாவில் உள்ள தொற்று நோய் வைத்தியசாலையில் கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், பிரிகேடியர் பண்டுக பெரேரா கடந்த வெள்ளிக்கிழமை (31) காலமானார். அவரது இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் எல்தெனிய மயானத்தில் இராணுவ மரியாதை மற்றும் அவரது நெருங்கிய இராணுவ சகாக்கள், குடும்ப உறுப்பினர்களின் ஒன்றுகூடலுக்கு மத்தியில் இடம்பெற்றது.

## இரண்டு மூன்று வாரங்களில்...

இனங் காணப்படலாம் என விசேட மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதனைக் கருத்திற் கொண்டு பூஸ்டர் தடுப்பூசியை விரைவாக பெற்றுக் கொள்ளுமாறும் நடைமுறையில் உள்ள சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றுமாறும் அந்த சங்கம் நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் டெல்டா திரிபு வைரஸை விட ஒமிக்ரோன் வைரஸ் மோசமானதாகவும் மிக வேகமாக பரவக்கூடியதாகவும் காணப்படுகிறது. பண்டிகைக் காலங்களில் மக்களின் நடமாட்டத்தை அவதானிக்கும் போது ஓரிரு வாரங்களில் பெருமளவு வைரஸ் தொற்றாளர்கள் உருவாவதை தடுக்க முடியாமற் போகும் என்றும் இதனால் சுகாதாரத் துறைக்கு பெரும் அழுத்தங்களை ஏற்படுத்தும் நிலை உருவாகலாம் என்றும் அந்த சங்கம் எச்சரித்துள்ளது.

அதேவேளை நாட்டில் இதுவரை 25 வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். ஓமிக்ரோன் திரிபு வைரஸ் காரணமாக மிக மோசமான நோய்கள் ஏற்படலாம் என்றும் அதனால் வைத்தியசாலைகளில் நெருக்கடி ஏற்படலாம் என்றும் தெரிவித்துள்ள மேற்படி சங்கம், அதனை தவிர்க்கும் வகையில் அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.(ஸ)

## பெருந்தோட்ட கைத்தொழில்துறையால் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

### அமைச்சர் ரமேஷ் பத்திரண



(லோரன்ஸ் செல்வநாயகம்)

பெருந்தோட்ட கைத்தொழில் துறை வரலாற்றில் அதிக ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்திலேயே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கடந்த வருடத்தில் ஏற்றுமதி வருமானமாக பில்லியன் கணக்கான ரூபாய்களை அரசாங்கம் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறப்பர் ஏற்றுமதி மூலம் ஒரு பில்லியன் அமெ. டொலரையும் தேங்காய் ஏற்றுமதி மூலம் 900 மில்லியன் அமெ. டொலரையும் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி மூலம் 500 மில்லியன் அமெ. டொலரையும் கடந்த வருடத்தில் வருமானமாக பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த வருடத்தில் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய சகல நிலத்திலும் முழுமையாக ஏற்றுமதிக்கான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இறப்பர் பால் சேகரிப்பில் மக்கள் முழுமையான கவனம் செலுத்தவில்லை. எனினும் தற்போது இறப்பர் கிலோவொன்றுக்கான விலை 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. 200 300 ரூபாவுக்கு கடந்த காலங்களிலும் விற்பனை செய்யப்பட்ட மிளகு தற்போது சுமார் 1000 ரூபாவரை விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் அனைத்து ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களின் விலைகளிலும் பெரும் முன்னேற்றம் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் சுகாதார அமைச்சருக்கு...

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் பரிசோதனையிலேயே அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி ராஜித சேனாரத்ன வீட்டுத் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவ மேற்பார்வையின் கீழ் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதவுடன் நெருக்கமாக இருந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ராஜித சேனாரத்ன நலமுடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு கடலில் மயிரிழையில்...

பயணிகளுடன் புறப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திர தேவி படகு இடை நடுவில் பழுதடைந்ததையடுத்து வடதாரகைப் படகின் உதவியுடன் குறிகட்டுவான் நோக்கி இழுத்து செல்லப்பட்டது. சுக்கான் தடி உடைந்தமையினால் இடைநடுவில் பயணிகளை வடதாரகைப் படகுக்கு மாற்ற முடியாத காரணத்தினால் பல இடையூறுகளுக்கு மத்தியில் சமுத்திர தேவி படகு வடதாரகைப் படகினால் இழுத்து செல்லப்பட்டது. காலை 07.00 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்பட்ட பயணிகள் காலை 10.00 மணியளவிலேயே குறிகட்டுவான் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தனர்.

## வங்கிகளில் வலுக்கட்டாய...

அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லையென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு வங்கிகளிலும் வெளிநாட்டு நாணயக்கணக்கைப் பேணும் சில வாடிக்கையாளர்கள் தமது கணக்கிலுள்ள டொலர்களை ரூபாவாக மாற்றுவதற்கான கோரிக்கை தொடர்பில் வங்கிகளால் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அதற்காக விண்ணப்பமொன்றில் கையெழுத்திடுமாறு கோரப்பட்டிருப்பதாகவும் சமூக வலைத் தளங்களில் பதிவுகளைச் செய்திருந்தனர்.

இவ்வாறான சம்பவம் தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்த ஊடகவியலாளரொருவர்,

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக தனது வெளிநாட்டு நாணயக்கணக்கிலுள்ள அனைத்து அமெரிக்க டொலர்களும் ரூபாவாக மாற்றப்படப்போவதாக தனக்கு தனியார் வங்கியொன்றினால் அறிவிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதுமாத்திரமன்றி தனது டொலர்கள் ரூபாவாக மாற்றப்படுவதை அறிந்திருப்பதுடன் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதாக உறுதிப்படுத்தும் வகையிலான படிவமொன்றில் கையெழுத்திடுமாறு அவ்வங்கி கோரிக்கைவிடுத்திருந்த போதிலும், தான் அதற்கு மறுத்துவிட்டதாகவும் அவர் அப்பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு பல உள்நாட்டு வங்கிகள் வாடிக்கையாளர்களின் அனுமதியின்றி அவர்களின் கணக்கிலுள்ள டொலர்களை ரூபாவாக மாற்றும் பணிகளை ஆரம்பித்துவிட்டதாக அந்த வங்கி தன்னிடம் சுட்டிக்காட்டியதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

தனது வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள டொலர்களை ரூபாவாக மாற்றுவதற்கு அனுமதியளிக்காவிடின் என்ன நேருமென்று வங்கி அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியபோது, சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரின் அனுமதியின்றி தம்மால் டொலர்களை ரூபாவாக மாற்றமுடியாதென்றும், ஆனால் இக் கணக்கு தொடர்பில் மேலும் சில வரையறைகள் விதிக்கப்படலாமென்று அவர்கள் பதிலளித்ததாகவும் மேற்படி ஊடகவியலாளர் அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அத்தோடு அவ் வங்கியால் தன்னிடம் கையெழுத்திடுமாறு கோரப்பட்ட படிவத்தையும் பகிர்ந்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இவ்விடயம் தொடர்பில் நேற்று புதன்கிழமை தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அதனூடாக மேற்கண்டவாறான தெளிவுபடுத்தலை வழங்கியிருக்கின்றார்.

வாடிக்கையாளர்களின் வெளிநாட்டு நாணயக்கணக்கிலுள்ள டொலர்களை வலுக்கட்டாயமாக ரூபாவாக மாற்றுமாறு நாட்டிலுள்ள வங்கிகளுக்கு மத்திய வங்கி பணிப்புரை வழங்கியிருப்பதாக சிலரால் வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன. அவற்றில் எவ்வித உண்மையுமில்லை அஜித் நிவாட் கப்ரால் அப்பதிவில் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

எமது நாடு இலவசக் கல்வி மிகவும் பாதுகாக்கப்பட்ட நாடாகும். தெற்காசியாவில் பல நாடுகளில் இது போன்ற இலவசக் கல்வி கிடையாது. ஜனாதிபதி உட்பட எங்கள் அரசாங்கம் தடுப்பூசிக்கு மிகவும் முன்னுரிமை அளித்துள்ளதாலும் இலவச சுகாதாரத் துறை இருப்பதாலும் கொரோனா தொற்றிலிருந்து மீள முடிந்துள்ளது. மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு முன்பிருந்தே எமது நாடு இலவசக் கல்வியையும் இலவச மருத்துவத்தையும் மரபுரிமையாகப் பெற்றது. மிஹிந்தலையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியில் உலகின் மிகப் பழமையான மருத்துவமனை அமைப்பும் அது தொடர்பான கல்வி நிறுவனமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எமது மாணவர்களை சிறந்த திறமையுள்ள மாணவர்களாக உருவாக்கப்பட வேண்டும். எனவே எங்கள் பிள்ளைகள் தங்கள் உயர்கல்வி வாய்ப்புகளைத் தொடர அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என்றார். (பா)

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு டொலருக்கு...

யோசனையொன்றை முன்வைத்துள்ளார். அமைச்சரவையில் இந்த யோசனையை தான் முன்வைத்துள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிக்கின்றார்.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து பணம் தற்போது கிடைப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டினார். கறுப்பு சந்தையில் 240 முதல் 245 வரையான பெறுமதியில் டொலர் மாற்றப்படுவதாகவும், வங்கிகளில் 203 ரூபாவிற்கே டொலர் மாற்றப்படுவதாகவும் அவர் கூறுகின்றார். 203 ரூபாவிற்கு டொலரை மாற்றுவதற்கு எந்தவொரு புலம்பெயர் தொழிலாளர்களும் விரும்புவதில்லை என்பதால், தான் இந்த யோசனையை முன்வைத்ததாக நிமல் சிறிபால டி சில்வா தெரிவிக்கின்றார்.

## சதொசவில் தண்ணீர்... (03 ஆம் பக்கத் தொடர்)

செய்யப்படுகிறது. சுற்றாடல் மாசைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் வெற்றுப் போத்தலை மீளப்பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நுகர்வோர் வெற்றுப்போத்தலை மீள வழங்கி மற்றுமொரு தண்ணீர் போத்தலைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்களிடமிருந்து 25 ரூபா மட்டுமே அறவிடப்படும் என்றும் அவர் தெவித்துள்ளார். (ஸ)

## யாழ். கொழும்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

சம்பவத்தில் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் சாரதியால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 53,177 பட்டதாரிகளுக்கு ஜன. 03ல்...

மாகாண சபைகள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

இப் பட்டதாரிகளுக்கான அடிப்படைச் சம்பளமாக 31,490 ரூபா வழங்கப்படுவதுடன் கொடுப்பனவுகளுடன் அவர்களுக்கான சம்பளம் 41,490 ரூபாவாக வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளில் 700 பேரின் நிரந்தர நியமனத்துக்கான கடிதம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னரே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், அவர்களது ஒருவருட பயிற்சி மார்ச் மாதத்தில் நிறைவடைவதே அதற்குக் காரணமென்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு 07இல் உள்ள பொது நிர்வாக அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

நிரந்தர நியமனம் வழங்கப்படும் பட்டதாரிகள் அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகங்களின் கீழ் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். தேசிய பல்கலைக்கழகமொன்றில் பட்டம்பெற்றுக் கொண்டுள்ள 45 வயதுக்குக் குறைவான பட்டாதாரிகளுக்கே இந்த நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதோடு அதில் 16,000 பேரின் மேன்முறையீடுகள் கவனத்திற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிரந்தர நியமனம் பெற்றுள்ளவர்களுள் 21ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது, என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## சகல பாடசாலைகளும்...

என்றும் அதற்கிணங்க முதலாம் தரம் முதல் 13 ஆம் தரம் வரையிலான வகுப்புகளுக்கு வழமை போன்று கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அனைத்துப் பாடசாலைகளிலும் அனைத்து வகுப்புகளுக்குமான கல்வி நடவடிக்கைகளை வழமை போன்று நடத்துவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையால் பாடசாலைகளில் பகுதி பகுதியாக மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. கல்வி நடவடிக்கைகளும் அதற்கான தினங்களும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தற்போது சுகாதார அமைச்சின் அனுமதி கிடைத்துள்ள நிலையில் அனைத்து மட்டுப்படுத்தல்களும் இரத்து செய்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாட்டில் அனைத்து பாடசாலைகளிலும் அனைத்து வகுப்புகளும் வழமைபோன்று நடைபெறவுள்ளன.

எவ்வாறெனினும் நாட்டில் நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டல்களையும் முழுமையாக பின்பற்றுமாறு சகல பாடசாலைகளுக்கும் சுகாதார அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது

முகக் கவசம் அணிதல்,அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியை பேணுதல் ஆகிய நடைமுறைகளைத் தொடர்ந்தும் கடுமையாக கடைப்பிடிக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

## சிறுவர்களுக்கும் நாளை முதல்...

நடைமுறைப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் தடுப்பூசி வழங்கும் செயற் திட்டத்தின் கீழ் மேற்படி 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கு முதல் தடவையாக தடுப்பூசி வழங்கப்படுவதாக தெரிவித்துள்ள அமைச்சர், அந்த வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு ஒரு தடுப்பூசியை மட்டும் பெற்றுக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதல் தடவையாக தற்போது நாடு முழுவதுமுள்ள 12 வயதுக்கும் 15 வயதுக்குமிடைப்பட்ட சிறுவர்களுக்கு முதலாவது தடுப்பூசி நாளை முதல் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## இரு பிரதேச சபைகளின்...

கோரளை மற்றும் ஹங்குரான்கெத்த பிரதேச சபைகளின் தலைவர்களை மத்திய மாகாண ஆளுநர் பதவி நீக்கம் செய்துள்ளார்.

இரு தலைவர்களையும் நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று (05) வெளியிடப்பட்டது.

தொடர்ச்சியாக இரண்டு வரவு செலவுத் திட்ட தோல்விகள் காரணமாக கங்கவட கோரளை பிரதேச சபையின் தலைவர் சுபாஷ் யட்டவர மற்றும் ஹங்குரான்கெத்த பிரதேச சபையின் தலைவர் ரணசிங்க திஸாநாயக்க ஆகியோர் நீக்கப்பட்டுள்ள அதேவேளை புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை துணைத் தலைவர்கள் பதவியில் இருப்பார்களென மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார். இதன்படி, கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தலைவராக ருவான் பெர்னாண்டோவும், ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தலைவராக லக்ஷ்மன் பால சூரியவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின் 168 (2) பிரிவின் கீழ், வரவு செலவுத் திட்டம் இரண்டு முறை தோற்கடிக்கப்பட்டால், தலைவர் பதவியை வகிக்க முடியாது, அதன்படி புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை துணைத் தலைவருக்கு தலைவராக செயல்பட அதிகாரம் அளிக்கப்படுமெனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

## மக்களுக்கான நிவாரணத்தை...

அபேகுணவர்தன, மக்களுக்கு நன்மை கிடைக்கும்போது எதிரணியினர் குரோத மனப்பான்மையுடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தூர நோக்குடன் செயற்படுவதால் தான் நிவாரண பொதியை வழங்க முடிந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று கருத்துத் தெரிவித்த அவர்,அமைச்சர் ஒருவரை நீக்குவது புதிய விடயமல்ல எனவும் மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் கூட அமைச்சர்கள் நீக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த அவர்,

2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது ஊடக மாநாட்டில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அரச ஊழியர்கள் மாத சம்பளம் பெறுகின்றனர்.பொருள் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது.ஓய்வூதியம் பெறுவோர் சமுர்த்தி பயனாளர்கள் மற்றும் அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் அறுவடை குறைந்தால் நஷ்டஈடு வழங்கவும் மனைப் பொருளாதாரத்தை மேற்கொள்ளவும் உதவி வழங்கப்பட உள்ளது. தனியார் துறையின் சம்பளத்தையும் அதிகரிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனது மாவட்டத்தை சேர்ந்த தனியார் நிறுவனமொன்று சம்பள அதிகரிப்பு வழங்குவதாக அறிவித்துள்ளது.

24 வருடங்களாக ஆசிரியர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியவில்லை. அதற்கு முடிவு கட்ட எமது அரசு நடவடிக்கை எடுத்தது.அவர்களுக்கும் இந்த கொடுப்பனவு கிடைக்கும்.

பசில் ராஜபக்ஷவின் தற்காலிக பொதி அழிவின் ஆரம்பமென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. இவ்வாறு நிவாரணம் வழங்கினால் பணவீக்கம் ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர். ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஊக்கம் வழக்கி சம்பளம் அதிகரிக்க அழுத்தம் கொடுத்ததால் பணவீக்கம் வராதா? மக்களுக்காக நிவாரணம் வழங்கினால் பணவீக்கம் வருகிறதாம்.இவர்கள் குரோத மனப்பான்மையுடன் செயற்படுகின்றனர். பொருளாதாரம் முன்னேறி வருகிறது. சுற்றுலா துறை முன்னேற்றம் கண்டு வருகிறது. தடுப்பூசி வழங்கும் நாடுகளிடையே இலங்கை முன்னிலையிலுள்ளது.

03 ஆம் தடுப்பூசி ஏற்றுவதற்கு வர மக்கள் அஞ்சுகின்றனர். எதிரணி அவர்களை பயமுறுத்தி வருகிறது. தடுப்பூசி வழங்கி தொற்று பரவுவதை தடுத்ததால் நாட்டை திறக்க முடிந்தது.

மக்களுக்கு வழங்கிய நிவாரண பொதியை எதிரணியால் ஜீரணிக்க முடியாதுள்ளது.மக்களின் நிலைமை குறித்து சிந்தித்து அரசாங்கம் செயற்படுகையில் அதனை எதிரணி விமர்சிக்கிறது.சகல சவால்களையும் 2022 இல் வெல்வோம்.பசில் ராஜபக்ஷ தூரதிருஷ்டியுடன் செயற்படுகிறார்.பல சவால்கள் இருந்தாலும் அவற்றை வென்று பொருளாதாரத்தை பலப்படுத்த அவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.அதனால் தான் இந்த நிவாரண பொதியை வழங்க முடிந்துள்ளது.

சுசில் பிரேம் ஜெயந்தை நீக்கியது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்னெடுக்கப்படுகிறது. அமைச்சர் ஒருவரை நீக்குவது புதிய விடயமல்ல.

சகல அரசுகளிலும் இவ்வாறு நடந்துள்ளது. பிரேமதாசவின் காலத்தில் காமனி திசாநாயக்க,லலித் அதுலத்முதலி போன்றவர்கள் நீக்கப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அநுர பண்டார நாயக்க,மங்கள சமரவீர ,சிறிபதி சூரியாரச்சி போன்றவர்கள் நீக்கப்பட்டனர்.

நீக்கியது சரியல்ல என சு.க தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். 2017 இல் அவர் அருந்திக்க பெர்ணான்டோவை நீக்கியது அவருக்கு மறந்து விட்டதா? அவர் தனது ஆட்சியிலும் நீக்கியுள்ளார்.

அரசாங்கத்தை பாதுகாக்கும் பொறுப்பு பொதுஜன பெரமுனவுக்குள்ளது. அரசுக்குள் குழுக்கூட்டத்தில் எந்த விமர்சனமும் முன்வைக்கலாம். குழுக்கூட்டங்களிலும் எம்மை சந்திக்கும்போது எதுவும் போசாதவர்கள் மைக் ஒன்று கிடைத்ததும் எதனையும் பேசுகின்றனர். கூட்டுப் பொறுப்புடன் அனைவரும் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வாகன விற்பனை

| மோட்டார் கார் | | வருடம் | இடம் |
|---|---|---|---|
| HP-7145 | நிசான் / சன்னி | 2000 | பாணந்துறை |

**மேலே காணப்படும் வாகனம் எமது இடத்தில் பரீட்சித்து பார்ப்பதுடன் Auction முறையில் விலைக்கு வழங்கப்படும்**

பாணந்துறை
0773 610 142
கிளின்ட்

LB FINANCE
எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# பிரசித்த ஏல விற்பனை

09ம், 10ம், டிசம்பர் 2020, 11ம், 22ம் ஜனவரி 2021, 9ம்,10ம் பெப்ரவரி 2021, 12ம், 15ம் மார்ச் 2021, 8ம், 9ம் ஏப்ரல் 2021, 10ம், 11ம் மே 2021, 10ம், 11ம் ஜீன் 2021, 12ம், 13ம் ஜீலை 2021, 12ம், 13ம் ஆகஸ்ட் 2021, 13ம், 14ம் செப்ரம்பர் 2021, 11ம், 12ம் ஒக்ரோபர், 11ம், 12ம், நவம்பர், 10ம், 13ம், டிசம்பர், இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த முடியாத காரணங்களினால் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜீன், ஜீலை, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் 2021 மாதங்களில் ஏல விற்பனைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் மற்றும் ஜனவரி மாதம் 2022 ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| பொலன்னறுவை, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, கொத்தாடுவ புதிய நகரம், கொலன்னாவ, தொட்டலங்க, தெமடகொட, கொம்பணித்தெரு, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, தெஹியத்தகண்டி நுவரெலியா, கட்டுநாயக்க அவிறிவத்த, சிலாபம், கொச்சிக்கடை- நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மீனுவங்கொட, நாரம்மல, குளியாபிட்டி, குருநாகல், குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல் நகர கிளை. அளுத்கம, களுத்துறை, பேருவளை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி | 26 ஜனவரி 2022 |
| ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அதுறுகிரிய தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெசெல்வத்தை - பாணந்துறை, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, ரத்மலான கல்கிச, அத்திடிய, கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளி, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கிராண்ட்பாஸ், வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, பிறீமியர் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி நகர கிளை, தலைமை அலுவலகம் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03. கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, கனேமுல்லை, | 27 ஜனவரி 2022 |
| மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, மாலபே, புத்தளம், மத்துகம, பதுரெலிய, ஆனமடுவ, ஜம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி கிளை, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, பலாங்கொடை, அவிசாவளை, எஹெலியகொட, இரத்தினபுரி, ஹங்வெல்ல, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிடிய, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை. | 28 ஜனவரி 2022 |
| கராபிட்டிய, காலி தங்காலை, அம்பலாங்கொட, பதுளை, பதுளை நகர கிளை, பண்டாரவளை, சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொஹுவல, ஹட்டன், மஸ்கெலியா, தம்புள்ளை, கெக்கிராவ, அனுராதபுரம் நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சி, தம்புத்தேகம, செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிச்சோலை, ஆரயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, ஏராவூர், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டை | 29 ஜனவரி 2022 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# விலைக்கோரல் அறிவித்தல்

## காசல் வீதி மகளிர் வைத்தியசாலை

**1. வளிச்சீராக்கியை சேர்வீஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் 2022**

**2. சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் 2022**

கொழும்பு 08, காசல் வீதி, மகளிர் வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022ஆம் வருடத்தில் ஒரு வருட காலத்திற்கு வளிச் சீராக்கிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திச் செல்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள் விலைமனு ஆவணக் கட்டணமாக 2500.00 ரூபா தொகையை மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் தமது ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022-01-05ஆம் திகதி முதல் 2022-01-24ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைக்கோரல் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''காசல் வீதி மகளிர் வைத்தியசாலைக்கு 2022ஆம் வருடத்தில் ''வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல்'' அல்லது ''சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திச் செல்லல்'' எனக் குறிப்பிட்டு 2022-01-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், வைத்தியசாலை பெறுகைக் குழு, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, கொழும்பு-08'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. விலைக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
5. விலைமனு ஆவணங்களை இலவசமாக காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் நிதி முகாமைத்துவப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு விலைமனுப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
7. குறித்த விண்ணப்பங்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
8. மேலதிக விபரங்களுக்கு காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் கணக்காளரைத் (011-2679731) தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**காசல் வீதி மகளிர் வைத்தியசாலை,**
**கொழும்பு-08.**

# நீர்கொழும்பு மாநகர சபை

## 2022ஆம் ஆண்டிற்காக மின்சார பொருட்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் 2022ஆம் ஆண்டிற்காக மின்சாரப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. கேள்வி ஆவணங்கள் மற்றும் அறிவுருத்தல் பத்திரங்களை ரூபா 2000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2022.01.07 முதல் 2022.01.20 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மாநகர கணக்காளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்கள் கோரல் ஆவணங்களை 2022.01.07 முதல் 2022.01.20 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் மாநகர கணக்காளர் திணைக்களதில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வேறுவேறு இரு உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என பெயர்குறிப்பிட்டு மீண்டும் அவ் இரு உறைகளையும் தனி உறையில் இட்டு 2022.01.21 பி.ப. 2.30 இற்கு முன் மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2022 ஆண்டிற்காக மின்சாரப் பொருட்களை வழங்குதல்' என்று குறிப்பிடுங்கள்.
5. விலைமனுக்களை திறத்தல் 2022.01.21 பி.ப. 2.30 இற்கு இடம் பெறுவதுடன் அவ் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு**

# இலங்கை போக்குவரத்துச் சபை (இபோச)

## 2022 ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் ஆண்டில் இபோச தலைமையகம், பிரதேச அலுவலகம், பிரதேச வேலைத்தளங்கள், டிப்போ, சாரதி பயிற்சி பாடசாலைகளில் பாவிக்கப்படும் உத்தியோகபூர்வ வாகனம் உட்பட சகல இலகு வாகனங்களையும் பழுது பார்ப்பதற்கு தேவையான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் உள்ளூர் உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட கராஜ்களை வலையமைப்பைப் பாவித்து (online) Web URL - https://sltb.lk/supplyregistration/ ஊடாக பதிவு செய்வதுடன், வழங்குநர்களைப் பதிவு செய்யும் காலஎல்லை 2022.01.06 முதல் 2022.02.06 வரையாகும்.

❖ 2021 ஆண்டிற்காக விண்ணப்பித்து தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநர்கள் தவிர்த்து 2022 ஆண்டிற்காக புதிதாக பதிவு செய்கின்ற வழங்குநர்கள் பதிவு செய்தல் வேண்டும்.

❖ 2021 ஆண்டில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் சரியான ஆவணங்களுடன் மீண்டும் பதிவு செய்தல் வேண்டும்.

**உருப்படி இலக்கம் மற்றும் விபரங்கள்:**

- இபோச பஸ் அணிக்கு தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் வேறு பொருட்கள்
- இபோசவிற்கு சொந்தமான இலகு வாகனங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் அவ் வாகனங்களின் பழுதுபார்த்தல் சேவை விடயங்கள்.
- சிவில் பொறியியல் விடயங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகள்

**செயலாளர், பெறுகைக் குழு**
**இலங்கை போக்குவரத்துச் சபை**
**இல. 200, கிருல வீதி,**
**கொழும்பு - 05**

**தொடர்புகள் - செயலாளர், பெறுகைக் குழு: - 0117706110/ 0771056110/ 011-2588457/ 071-2099304**
**ஈமெயில் - tendersec@sltb.lk**

# காலி மாநகர சபை – கேள்வி அறிவித்தல்

## கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் இடங்களை 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

02. 2022.01.10ம் திகதி முதல் 2022.02.07 பி.ப. 3.00 வரை கேள்விகள் நிபந்தனைகளுடன் கேள்வி மாதிரிப் பத்திரங்களை காலி மாநகர சபையின் நகர சபையின் மாநகர கணக்காளரிடமிருந்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்வி மாதிரிப் பத்திர கட்டணங்கள் மற்றும், கேள்விப் பிணை வைப்புத் தொகையை செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ளலாம்.

03. 2022.02.08ம் திகதி மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு மற்றும் அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

04. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி ஒரு உறையிலும் நகல் பிரதி மேலுமொரு உறையிலும் இடப்பட்டு பொறியிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு சீல் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கோரும் கேள்வியின் பெயரை குறிப்பிட்டு (உ+ம் மெயின் வீதி, கடை கட்டிடத் தொகுதி மேல் மாடி கடை இல. 30 குத்தகைக்கு பெறல்) கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.02.08 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு காலி மாநகர ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அல்லது காலி மாநகர ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சகல கேள்விகளுக்கும் கேள்வி நிபந்தனைகளை ஒப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சித்திகரமான கேள்விதாரருக்கு அவரது விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்து 10 நாட்களுக்குள், ஒரு மாத குத்தகை தொகைபோன்று மூன்று மடங்கு தொகையை பாதுகாப்பு பிணையாக வைப்புச் செய்து முறையான ஒப்பந்தம் ஒன்றிற்கு வரல் வேண்டும். (செலுத்தப்படும் சகல குத்தகைத் தொகைக்கும் அரச வரிகள் பொருந்தும்)

06. சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்விகள் பற்றி ஏதாவது சர்ச்சைகள் ஏற்படின் அல்லது இங்குள்ள நிபந்தனைகளுக்கு அப்பால் கேள்வியைப் பாதிக்கும் விடயங்கள் சம்பந்தமாக கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும். குறித்த நேரத்திற்கு பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | விபரம் | கேள்வி மாதிரிப் பத்திர கட்டணம் (ரூ. சதம்) | கேள்வி பிணை வைப்பு தொகை (ரூ. சதம்) | குறைந்தபட்ச சேகரிப்புத் தொகை (ரூ. சதம்) |
|---|---|---|---|---|
| 01 | பிரதான வீதி கடை கட்டிடத் தொகுதி மேல் மாடி கடை இல.30 | 2,000.00 | 100,000.00 | 3500,000.00 |
| 02 | பிரதான வீதி கடை கட்டிடத் தொகுதி மேல் மாடி கடை இல. 31 | 2,000.00 | 100,000.00 | 3500,000.00 |

07. காரணம் கூறாமலேயே எந்தக் கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமை காலி மாநகர சபைக்கு உரியது

**ரணில் விக்ரமசேக்கர**
**மாநகர ஆணையாளர் (பதில்)**
**காலி மாநகர சபை**

**2021.12.30ம் திகதி**
**காலி மாநகர சபை அலுவலகத்தில்**

திகதி 04.01.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4637
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,721,480.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 6 5 4 1 0 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,538,400.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2932
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,334,260.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 04 16 23 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,803,815.20

**Mega POWER மெகா பவர்** கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 985
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,053,940.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 165,155,947.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 03 04 05 78

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 667
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,965,920.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 06 28 31 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,230,858.00

**செவன** உங்களுக்கு வீடு – கைகளில் காசு
சீட்டிழுப்பு இலக்கம் : 340
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,766,960.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 09 40 51 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,044,574.40

**சுபிரி வாசனா**
சீட்டிழுப்பு இலக்கம் :1657
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,665,680.00
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 10 32 50 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,370,502.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

**மகாவலி வலயம் சார்ந்த குளங்கள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

## இலங்கை மகாவலி அதிகார சபை

# ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் – 2022

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ்க்காணும் வலயங்கள்/ பிரதேசங்களில் அரச பெறுகை வழிகாட்டி கோவை, 2006 இன் 3.4 பந்தியில் குறிப்பிடப்படும் சந்தை விலை குறிப்பிடும் முறையில் (Shopping) நிர்மாண வேலைகளை செய்வதற்கு ஈடுபடுத்தப்படும் வேளையில் நிர்மாண வேலைகளை வழங்குவதற்காக, 2022 ஆண்டு சார்பாக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

01. பீ வலயம்
02. சீ வலயம்
03. டி வலயம்
04. ஜி வலயம்/ மொரகஹகந்த
05. எச் வலயம்
06. எல் வலயம்
07. ஹுருளுவெவ வலயம்
08. வலவ வலயம்
09. பிரதான குளங்கள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவு
10. தலைமையகம் (கொழும்பு)
11. ரம்பகென்ஓய வலயம்
12. ஈ வலயம்

இதற்கான இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 இல். அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 09ஆம் மாடியில் 2022.02.07 14.00 மணி வரை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையினால் இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் கோரப்படும் விபரங்களை வழங்கி சீடா (CIDA) நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

கொவிட் தொற்றுக் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் காரணமாக 2021 ஆண்டிற்காக பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் 2022 ஆண்டிற்காகவும் பதிவு செய்து கொள்வதற்கு இலங்கை மகாவலி அதிகார சபை எண்ணியுள்ளது. எவ்வாறெனினும் ஒப்பந்தக்காரர்களின் CIDA பதிவில், விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற வலயத்தின்/ பிரதேசத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு தேவைப்படின் புதிய விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு (2021ஆம் ஆண்டிற்காக பதிவு செய்திராத) கம்பனிகள் தனிப்பட்ட கடிதத் தலைப்பின் மூலம் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்து ரூ. 200.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி இலங்கை மகாவலி அதிகார சபையின் கொழும்பு-10, டி.பி. ஜாயா மாவத்தை, இல. 500, எனுமிடத்தில் 03ஆம் மாடியில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) இன் அலுவலகத்தில் அல்லது கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதான குளங்கள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவு திகன/ சகல குடியிருப்பு வியாபார முகாமைத்துவ அலுவலகம்/ சகல செயற்றிட்டப் பணிப்பாளர் பணிமனைகளில் இருந்து குறித்த விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவது 2022.01.06 முதல் 2022.02.03 வரை வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மட்டுமே.

பொறியிடப்பட்ட விண்ணப்பங்கள் மூலப் பிரதி மற்றும் மேலும் ஒரு பிரதியுடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022" என்று குறிப்பிட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு மேற்படி இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து, ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) இலங்கை மகாவலி அதிகார சபை, தொழில்நுட்ப சேவைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. இல. - 011-2689651, 011-2687475.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை.**

# கிழக்கின் குரல்



# திருமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்

ரொட்டவெவ குருப் நிருபர்

திருகோணமலை இயற்கை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (04) திருகோணமலை துறைமுகத்தினை பார்வையிடுவதற்காக வருகை தந்தபோது ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

நாடு பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து இருந்தாலும், அரசாங்கம் இவ்வாறான சூழலிலும் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களில், துறைமுக அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

உலகில் பிரசித்திபெற்ற துறைமுகங்களில் ஒன்றாக திருகோணமலை துறைமுகம் காணப்படுகின்றது. இயற்கைத் துறைமுகம் கடந்த காலம் முதல் அபிவிருத்தி செய்யப்படவில்லை. தற்போது அரசாங்கம் திருகோணமலை துறைமு



கத்தை அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகளில் கூடுதலான கவனத்தை செலுத்தி வருகின்றது.

கப்பல் மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தனவின் முயற்சியில் திருகோணமலை துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளை நாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கில் இவ்வாறான வீதி அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முக்கிய கோரிக்கைகளாக வீதி அபிவிருத்தி மற்றும் கப்பல் போக்குவரத்து தொடர்பான அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக இந்த துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும். நாட்டில் ஏற்படுகின்ற வேலையில்லா பிரச்சினைகளுக்கும் பாரிய ஒரு தீர்வு எட்டப்படும் என அவர் தெரிவித்தார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர், இந்திய பிரமுகர்களுடன் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை நிறைவுசெய்து, திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தையும் பார்வையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.



அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக கிட்டங்கி தாம்போதியில் வெள்ளநீர் பெருக் கெடுத்துள்ளதை படத்தில் காணலாம்.

(படம்; நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# கிண்ணியா அலிகாருக்கு ஸ்மார்ட் கணினி உபகரணங்கள்

## எதிர்க்கட்சி தலைவரால் வழங்கிவைப்பு

முள்ளிப் பொத்தானை குறூப், கிண்ணியா மத்திய நிருபர்



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய திறமையான இளம் தலைமுறையை உருவாக்கும் நோக்கில், டிஜிட்டல் கணினி உபகரணங்களை வழங்கும் முன்னோடி திட்டமான 'பிரபஞ்சம்' மூன்றாம் கட்டம் செவ்வாய்க்கிழமை (04) ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன உலகில் வளமான டிஜிட்டல் எதிர்காலத்திற்காக நாட்டின் இளைய தலைமுறையை தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற ஸ்மார்ட் கணினி பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாக கட்டியெழுப்பும் 'பிரபஞ்சம்' முன்னோடித் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (750,000) மதிப்பிலான வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினி உபகரணங்களை திருகோணமலை கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்திற்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச செவ்வாய்க்கிழமை (04) வழங்கி வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் எண்ணக்கருவாக அமைந்து செயற்படும் 'பிரபஞ்சம்' நிகழ்ச்சித் திட்டம், நாட்டின் பின்தங்கிய பாடசாலை கல்வி முறையில் கல்வி கற்கும் பிள்ளைகளின் நவீன தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்டோ–மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

ஏறாவூர் நிருபர்

மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். செவ்வாய்க்கிழமை (04) முச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து இடம்பெற்ற வேளை அவ்வீதிவழியே சென்ற வாகனமொன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமராவில் விபத்து இடம்பெற்ற காட்சிகள் பதிவாகியுள்ளன. குறுக்குப்பாதையிலிருந்து பிரதான வீதிக்கு நுழைந்த முச்சக்கர வண்டியுடன், மோட்டார் சைக்கிள் மோதியதில் முச்சக்கர வண்டியினைச் செலுத்தியவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 68 வயதுடைய நாகப்பன் ராமையா என்பவரே உயிரிழந்துள்ளார்.

செங்கலடி பிரதேச வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தினை திடீர் மரண விசாரணையதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தார். சந்திவெளி பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசல் 200ஆவது கொடியேற்ற விழா

பெரியநீலாவணை விசேட நிருபர்





கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் 200 வது கொடியேற்று விழா செவ்வாய்க்கிழமை (04) ஆரம்பமானது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் எஸ். எம். ஏ . அஸீஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

200 வது கொடியேற்று விழாவில் நினைவு படிகம் இதன் போது கலந்து கொண்ட அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டதுடன், கொடியேற்று தினத்தில் இருந்து தொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா சாஹூல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்கள் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித றிபாஈ றாதிப், உலமா பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு, கொடியிறக்கு தினமான எதிர்வரும் ஜனவரி 16 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கிவைக்கப்படவுள்ளது. இதேவேளை 200 வது கொடியேற்று விழாவையொட்டி முத்திரை ஒன்றும் வெளியிடப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாஉல்லா, எச்.எம்.எம். ஹரீஸ், பதில் அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம். எஸ்.எம். நிசார், வக்பு சபை உறுப்பினர் டாக்டர் ஏ. உதுமா லெப்பை, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை. செனவிரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



காத்தான்குடி பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு திங்கட்கிழமை (03) இடம்பெற்றபோது. (படம்: புதிய காத்தான்குடி தினரன் நிருபர்)

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின்

# கிழக்கு மாகாண காரியாலயம் திறந்துவைப்பு

கல்லடி குறூப்,வெல்லாவெளி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்



தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரி.பி.பரமேஸ்வரனால் கிழக்கு மாகாண காரியாலையம் செவ்வாய்க்கிழமை (04) மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான க.கருணாகரன் கலந்துகொண்டு உரையாற்றுகையில், மக்களுக்கு உயர்வான சேவையினை வழங்கும் நோக்குடன் அரசு இவ்வாறான அலுவலகங்களை மாகாணங்களில் திறந்து வருகின்றது என்றார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினரான ரி.பி.பரமேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில், எங்களுடைய நோக்கம் எங்களுடைய மக்களுக்கும் பொலிஸ் திணைக்களத்திற்கும் நல்லதொரு உறவை உருவாக்கி அதன் மூலம் பயனைப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். 9 மாகாணங்களில் வடக்கு கிழக்கு தனி மாகாணமாகவும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 3 மாவட்டத்திக்கும் சேர்ந்த பணிமனையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கு மாகாண பணிப்பாளரும் புலனாய்வு உத்தியோகத்தரும் கடமைகளை மேற்கொள்வார்கள். இதன் பிரதான அலுவலகம் கொழும்பில் உள்ளதாகவும், 24 மணி நேரமும் இயங்குகின்ற 1960 என்ற தொலைபேசி எண்ணின் மூலம் முறைப்பாடுகளை அறிவித்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் மூலம் நல்லதொரு சமூதாயத்தை உருவாக்குவதற்கு இதன் போது, பொது மக்கள் உரிமையுடன் வேலைகளை பெற்றுக்கொள்வதற்கான ஒரு ஆணைக்குழுவாக மாற்றுவதே அரசாங்கத்தின் கொள்கையாக காணப்படுகின்றது என தெரிவித்தார். இந்நிகழ்வின் போது சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (3) நடைபெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வின் போது. (படம்: காரைதீவு குறூப் நிருபர்)



திருகோணமலை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது. (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)



பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற சத்தியப் பிரமாண நிகழ்வின் போது. (படம்: பாலமுனை விசேட நிருபர்)



ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற புது வருட சத்தியப்பிரமாண நிகழ்வின் போது. (படம்: கல்குடா தினகரன் நிருபர்)

# இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களும் விடுதலை

**மன்னார் குறுப் நிருபர்**

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் நேற்று மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை தலைமன்னார் கடற்படையினர் கடந்த மாதம் 19 ஆம் திகதி கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.




இவ்விடயம் தொடர்பாக சட்டத்தரணி எஸ்.டிணேசன் தெரிவிக்கையில்,

12 இந்திய மீனவர்களும் நேற்று புதன்கிழமை (5) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் சிறுவர் ஒருவரும் அடங்குகின்றார்.

இதன் போது மீனவர்களுக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு கடற்தொழில் திணைக்களத்தினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இதன் போது மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தனர், மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் ஒரு வருட சாதாரண சிறை தண்டனை வழங்கப்பட்டதோடு, சிறை தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டமையால் 12 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

மீனவர்களில் சிறுவர் ஒருவர் உள்ளமையினால் நிபந்தனையின் அடிப்படையில் எச்சரிக்கப்பட்டு, சிறுவன் தனது கல்வியை தொடர வேண்டும் என நீதவான் அறிவுறுத்தியதோடு மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட செயலமர்வு



**யாழ். விசேட நிருபர்**

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் புத்தசாசன மதவிவகார கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலகம் என்பன ஒன்றிணைந்து எற்பாடு செய்த செயலமர்வு ஒன்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாணத்தின் அரசாங்க கொள்கை அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லும் செயற்றிட்டங்களுக்கு இணையாகவும் கொரோனா தொற்று நிலைமையிலும் மக்களின் முன்மொழிவுகளுக்கு ஏற்ப 2022 ஆம் ஆண்டுக்கான மிகச்சிறந்த வரவுசெலவுத்திட்டத்தை உருவாக்குதல், அதுதொடர்பில் ஊடகங்கள், மக்களை தெளிவுபடுத்துவதை நோக்காக கொண்டு இச்செயலமர்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் புத்தசாசன, மதவிவகார கலாச்சார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட ஊடகசெயலாளர் ஜெ.யோகராஜ், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் கீழ் கடமையாற்றும் அரச தகவல் திணைக்கள பதவிநிலை அலுவலக உத்தியோகத்தர்கள், மாவட்ட ஊடகவியாளர்கள், மற்றும் பல்கலைக்கழகங்களில் ஊடகத்துறையை கற்றுவரும் மாணவர்கள் என பலரும் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.

# மாணவிகள் மீது பாலியல் தொந்தரவு; ஆசிரியரின் விளக்கமறியல் நீடிப்பு

**புதுக்குடியிருப்பு விசேட மாங்குளம் குருப் நிருபர்கள்**

முல்லைத்தீவில் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதான ஆசிரியரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் 24.12.2012 அன்று கைது செய்யப்பட்டிருந்தார்.

பாடசாலை மாணவர்கள் மீது ஆசிரியர் பாலியல் தொந்தரவு செய்தமை தொடர்பில் சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை தொடர்ந்து (24.12.21) அன்று முல்லைத்தீவு பொலிஸாரால் ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்ட ஆசிரியர் விசாரணைகளின் பின்னர் 25.12.21 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை ஜனவரி மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து நேற்று இதுதொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்ட முல்லைத்தீவு நீதிபதி சந்தேகநபரை எதிர்வரும் 18.01.2022 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்துள்ளார்.

# பாதையை புனரமைத்து தருமாறு கரைதுறைப்பற்று மக்கள் கோரிக்கை

**பரந்தன் குறுப் நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் போன்ற பிரதேசங்களுக்கான பிரதான வீதியாக காணப்படுகின்ற இரட்டைவாய்க்கால் சாலை வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதால் கிராம மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு பிற்பட்ட வட்டுவாகல் அரிச்சல் அதேபோன்று முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சாளம்பன் வலைஞர் மடம், இரட்டை வாய்க்கால் ஆகிய கிராமங்களும் அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அம்பலவன்பொக்கணை, புது மாத்தளன், பழைய மாத்தளன், கரியல் வயல், பட்டிகரை, விளாத்தி மோட்டை, நெல்லி மொட்டை, நல்லதண்ணி, தொடுவாய் காயா மோட்டை, சாலை போன்ற 19 இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான பிரதான வீதியாக இது காணப்படுகின்றது. இதில் ஏ35 வீதியின் இரட்டைவாய்க்கால் சந்தி முதல் சாலை வரைக்குமான சுமார் 13 கிலோ மீற்றர் வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் குறித்த கிராமங்களில் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் குறித்த வீதியை போக்குவரத்துக்காக பயன்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர். எனவே குறித்த வீதியை விரைவில் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெடிகுண்டுகளை கடத்திச்செல்ல முற்பட்ட ஆறு பேர் கைது

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



புதுக்குடியிருப்பில் பாரிய வெடிகுண்டுகளை இரும்பிற்காக கடத்திச்செல்ல முற்பட்ட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட பாரிய இரண்டு வெடிகுண்டுகளை இரும்பிற்காக கடத்திச்செல்ல முற்பட்ட 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட இரண்டு பாரிய வெடிகுண்டு இருப்பதை அங்கு வேலி அமைப்பதற்காக சென்ற நபர் இனம்காட்டியுள்ளார். இதனைதொடர்ந்து அதனை இரும்பிற்கு விற்பதற்காக எடுத்துசெல்லமுற்பட்ட போதே புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியினை சேர்ந்த 6 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஒவ்வொன்றும் சுமார் 400 கிலோ கிராம் எடைகொண்ட குண்டுகள் எனவும் இவை இரும்புக்காக கடத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்களை நேற்று 05.01.2022 மாங்குளம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாடு முட்டி முதியவர் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வளர்ப்பு மாடு முட்டி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தை சேர்ந்த, மண்கும்பான் பிள்ளையார் ஆலய காவலாளியான நல்லையா கணேஸ்வரன் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 29ஆம் திகதி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான மாட்டினை கட்ட முற்பட்ட போது, அவரை மாடு வயிற்றுப்பகுதியில் முட்டியுள்ளது. மாட்டின் கொம்புகள் குத்தி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 5 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# மாந்தை கிழக்கில் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கிவைப்பு



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஊடாக மாந்தை கிழக்குப் பகுதியில் 21 பேருக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் நிலவும் காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் ஊடாக 21 பயனாளிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் செல்வி நிறஞ்சனா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராம அலுவலர்,காணிக்குழு உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டுள்ளனர்.

# பக்தர்கள் இருவருக்கு கொரோனா தொற்று

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.தென்மராட்சி பகுதியை சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

சபரிமலை யாத்திரை செல்வதற்காக இரு பக்தர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# விவசாயிகள் நெல் அறுவடையை முன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது

யாழ்.பல்கலைகழக விரிவுரையாளர் நா.பிரதீபராஜா

**யாழ்.விசேட நிருபர்**

வடமாகாணத்தில் அடுத்தவாரம் முதல் மழையை எதிர்பார்க்க முடியும் என்பதால் விவசாயிகள் நெல் அறுவடையை முன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது என யாழ்.பல்கலைகழக புவியியல்துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் தற்போது பனி பொழிவு அதிகரித்துள்ளது. எனினும் எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் மிதமானது தொடக்கம் கனமானது வரை மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

தற்போதைக்கு வடமாகாணத்தின் உள்நில பகுதிகளில் குறிப்பாக ஏ9 வீதியை அண்மித்த பகுதிகளில் இரவு வெப்பநிலை 17 செல்சியஸ் வரை குறைவடையகூடிய சாத்தியகூறுகள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

# இ.போ. சபை பஸ் மீது கல்வீச்சு தாக்குதல்; பயணிகள் அசௌகரியம்

**நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன், யாழ். விசேட நிருபர்கள்**



பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு புறப்பட்டு சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மீது வல்லை புறாப்பொறுக்கி பகுதியில் வைத்து கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை (05) அதிகாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் பஸ் வண்டியின் முன் பக்க கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து பருத்தித்துறை சாலையிலிருந்து பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடாமையால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

இதனைத்தொடர்ந்து நெல்லியடி மற்றும் காங்கேசன்துறையில் இருந்து வருகை தந்த பொலிஸார் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து காலை 7 மணியளவில் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (04) இரவு 8 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ் வண்டி நடத்துனர் மற்றும் சாரதி மீது நெல்லியடி நகர் பகுதியில் வைத்து தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தினை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம்

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தின் வாயில் முன்பாக நேற்று (05.01) காலை 09.45 மணியளவில் பொதுமக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பாடசாலைக்கு ஆளுமை மிக்க அதிபர் ஒருவரை நியமிக்குமாறு வலியுறுத்தியே இவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் 'கல்வித் திணைக்களமே அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கு அடிபணியாதே, கல்வித் திணைக்களமே ஆளுமைமிக்க அதிபரே எமக்கு வேண்டும், எமது பாடசாலையின் தரத்தினை குறைக்காதே, கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியினை தடுக்காதே' போன்ற பல்வேறு வசனங்களை தாங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டத்தில் பொதுமக்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என 50ற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் சுமார் 50 நிமிடங்கள் வரை போராட்டம் தொடர்ந்தது.

# நகர்வலம்



## மாத்தறை மாவட்டத்தில்; 14,958 ஹெக்டயாரில் நெல் பயிர்ச்செய்கை

(மாத்தறை தினகரன் நிருபர்)

மாத்தறை மாவட்ட 2020-2021 ஆம் வருட பெரும் போகத்தில் 14,958.74 ஹெக்டயாரில் நெல் பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான பொட்டாசியம் கிளோரய்ட் உரம் 897.52 மெட்ரிக் தொன் தேவைப்பட்டபோதும் 794.07 மெட்ரிக் தொன் மாத்திரமே கிடைத்துள்ளதாக மாத்தறை மாவட்ட உரக் களஞ்சியத்தின் பணிப்பாளர் பீ.கே.எச். சஜித் தெரிவித்தார்.

நெனோநய்ட்ரஜன் உரம் 17.758 லீட்டர் தேவைப்பட்டபோதிலும் 940 லீட்டர் மாத்திரமே கிடைத்துள்ளது. இந்தப் பசளையை 714.77 ஹெக்டயாரில் நெல் விதைப்பதற்காக 1885 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சேதனைப் பசளை 149.587 லீட்டர் தேவைப்பட்ட போதிலும் 89.034 லீட்டர் மாத்திரமே கிடைத்துள்ளது. இவற்றை 10017 ஹெக்டயாரில் பசளையிட 24703 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எம்.ஓ.பி. உரம் 23120 மெட்ரிக் தொன் கிடைத்துள்ளதாகவும், அவற்றை 1001.49 ஹெக்டயாரில் இடுவதற்காக 2495 விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் உரக் களஞ்சியசாலையி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



வட மத்திய மாகாண பட்டதாரி பயிலுனர்கள் 768 பேருக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று (05) அநுராதபுரம் கொரகஹவெவ பகுதியில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் நடைபெற்றது. இதன் போது ஆளுநர் பயிலுனர் ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குவதையும் நியமனம் பெற இருப்பவர்களையும் படத்தில் காணலாம்.
(படங்கள்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)



கொரோனா தொற்று உக்கிரமடைந்த காலப்பகுதில் நீர் வழங்கல் நடவடிக்கையில் அவரச சேவை மற்றும் அத்தியாவசிய சேவை நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஊழியர்களுக்கு சன்மானமும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நீர் வழங்கல் சபை தலைமை காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஊழியர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம்.

இ.போ.ச பஸ்களை மாத்திரம் திருத்தும்

## மதவாச்சி இ.போ.ச வேலைத்தளத்தை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை

திறப்பனை தினகரன் நிருபர்

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இ.போ.ச பஸ்களை மாத்திரம் திருத்தியமைக்கும் மதவாச்சி பிரதேச வேலைத் தளத்தின் பணிகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

மதவாச்சி பிராந்திய வேலைத் தளத்தில் இது வரையில் இ.போ. சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகள் மாத்திரமே திருத்தியமைக்கப்பட்டு வந்தன. எதிர்காலத்தில் பஸ் வண்டிகள் மாத்திரமல்லாது அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், அரசாங்கத்துக்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் திருத்தியமைக்கும் ஒரு அரச வேலைத்தளமாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளேன் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



மதவாச்சி பிரதேச வேலைத் தளம் 20 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியில் அமையப் பெற்றுள்ளது. இங்கு சுமார் 30 ஊழியர்களுடன் இந் நிறுவனம் தற்சமயம் இயங்கி வருவதோடு, எதிர்காலத்தில் தொழில்நுட்ப அபிவிருத்தி பயிற்சி அதிகார சபையின் உதவியுடன் அரச வாகனங்களை திருத்தியமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக இதன்போது பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

## புதிய செயலாளராக சுஜித் ஜயசுந்தர

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளம் ஆனமடுவ பிரதேச சபையின் புதிய செயலாளராக, புத்தளம் நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் சுஜித் ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனமடுவ பிரதேச சபையில் ஏற்பட்டுள்ள செயலாளர் வெற்றிடத்திற்கே இவர் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் நகர சபையில் செயலாளர் வெற்றிடம் காணப்பட்ட போது ஆறு மாதங்களுக்கு மேல், தற்காலிக செயலாளராக கடமையாற்றி வந்த சுஜித் ஜயசுந்தர, நகர சபைக்கு நிரந்த செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் (04) வரை நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி வந்துள்ளார்.

புதிய செயலாளராக கடமைப் பொறுப்பேற்கவுள்ள சுஜித் ஜயசுந்தரவுக்கு புத்தளம் நகர சபை ஊழியர்களால் (4) பிரியாவிடை வைபவம் ஒன்று நகர சபையில் நடைபெற்றது.

## பழைய மாணவர்களால் ஹுமைஸரா அபிவிருத்தி திட்டங்கள் கையளிப்பு

அஜ்வாத் பாஸி

களுத்துறை மாவட்டத்தில் முன்னணி தேசிய பாடசாலைகளிலொன்றான பேருவளை, சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையிலிருந்து வெளியேறிய பழைய மாணவர்களினால் (O/Level Batches) ஒன்றுசேர்ந்து பல மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை உள்ளக அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பௌதீக வளங்களை பாடசாலைக்கு வைபவரீதியாக கையளிக்கும் நிகழ்வு இன்று 06ஆம் திகதி காலை 8.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.ஆர்.எம். ரிஸ்கி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் களுத்துறை கல்வி வலய பணிப்பாளர் திரு. ஏ.யூ. விக்கிரமாரச்சி பிரதம அதிதியாகவும் பேருவளை பிரிவு கல்விப் பணிப்பாளர் திரு.டபிள்யூ.ஏ.ஜே.யூ. சோமரட்ண விசேட அதிதியாகவும் கலந்துகொள்வர். இந்நிகழ்வில், 1986ஆம் ஆண்டு இப்பாடசாலையிலிருந்து வெளியேறிய சா/த மாணவர்களின் உதவியில் பாடசாலைக்கு ஒலி பெருக்கி கருவிகளும் இஷ்ரத் அலி குழுவினரின் உதவியுடன் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பாடசாலை விளையாட்டு அறையும் இதன்போது அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது.



மேலும் 1990ஆம் ஆண்டு சா/த மாணவர்களின் நிதியுதவியில் பாடசாலைக்கு CCTV கெமரா இணைப்பு மற்றும் வாசிகசாலைக்கான கதிரைகளும் 1993 சா/த மாணவர்களின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாடசாலை விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு திறப்பு மற்றும் 1996ஆம் ஆண்டின் சா/த மாணவர்கள் உதவியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைக்கான தளபாடங்கள் அன்பளிப்பும், 2002ஆம் ஆண்டின் சா/த மாணவர்களின் உதவியில் பாடசாலை பேன்ட் குழுவினருக்கான சீறுடைகளையும் இந்நிகழ்வில் வைத்து பழைய மாணவர் அமைப்பினால் அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன.

மேற்படி பாடசாலையின் அபிவிருத்திக்கு கைகொடுத்த மாணவர்கள் விழாவின் இறுதியில் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு அதிதிகளினால் கௌரவிக்கப்படவிருப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆசிரியர் குழாம் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஊர் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு சார்பாக அப்ராஸ் அப்துல்லாஹ் தினகரனுக்கு தெரிவித்தார்.

## வான்–ஆட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து

ஆறுபேர் காயம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



யாழ்ப்பாணம் கண்டி ஏ 9 பிரதான வீதியின் மரதன்கடவள வலகம்பாகுவ சந்திக்கு அருகில் வான் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இடம்பெற்ற கோர விபத்தில் காயமடைந்த ஆறு பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மரதன்கடவள பொலிஸார் தெரிவித்தனர்.

கெகிராவ பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு பயணித்த முச்சக்கர வண்டியொன்றும் திறப்பனை பகுதியிலிருந்து கெகிராவ பகுதி நோக்கி பயணித்த வான் ஒன்றும் நேற்று மாலை மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் முச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் வானுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் கெகிராவ மற்றும் திறப்பனை பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

## முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் பவுசுல் காலித் காலமானார்



அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் பொதுச்செயலாளரும் கலாநிதி ரீ. பி ஜாயா ஞாபகார்த்த நிதியச் செயலாளரும் பிரபல அரசியல், சமூக செயற்பாட்டாளருமான பவுசுல் காலித் (வயது 79) நேற்று முற்பகல் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார்.

தர்காநகர் மர்ஹூம் எச்.எம். காலித், தர்காநகர் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் மறைந்த பாத்திமா காலித் தம்பதியினரின் மகனும் மர்ஹூம் டோனி ஜாயா தம்பதியினரின் மருமகனுமாவார்.

## புதையல் தோண்டிய நால்வர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மின்னேரிய கிரித்தள வனப்பகுதியில் தியபெதும கோதுருவெவ பிரதேசத்தில் புதையல் தோண்டிய நால்வரை கைது செய்துள்ளதாக (02) மின்னேரிய தேசிய வனப்பூங்காவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் எட்டுப்பேர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொல்பொருட்களை தேடும் நோக்கில் 50 அடி ஆளத்தில் குழி தோண்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்த போது சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு ஜெனரேட்டர்கள், கற்பாறைகளை வெடிக்கவைக்கும் இரண்டு இயந்திரங்கள், ஒரு நீர் இறைக்கும் இயந்திரம், வெடிபொருட்கள் அதற்கான நூல், நீர்க்குழாய், கல் வெட்டும் இயந்திரம், எட்டு கையடக்க தொலைபேசிகள் மற்றும் தங்குமிட கூடாரம் உள்ளிட்ட பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஒரு மாத காலத்திற்கும் மேல் குறித்த இடத்தில் தங்கி இருந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மன்னம்பிட்டி, அரலகங்வில, பெலிஅத்த, நீர்கொழும்பு மற்றும் தம்புள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என வனபூங்கா அதிகாரி மேலும் தெரிவித்தார்.

களுத்துறை வெட்டுமகட பகுதியில்

## பொறுப்பற்ற முறையில் வீசும் குப்பை கழிவுகளால் பொதுமக்கள் அசௌகரியம்

தடுத்து நிறுத்துமாறு பாடசாலை சமூகம் கோரிக்கை

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை வெட்டுமகட பகுதியில் அமைந்துள்ள பள்ளி வீதியில் சமூக பொறுப்பற்ற வகையில் வீட்டு கழிவு குப்பைக்கூளங்களை பிரதேச வாசிகள் வீதி ஓரங்களில் வீசிச் செல்வதால் நாளாந்தம் இந்த வீதியூடாக பயணிக்கும் பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட பிரதேச வாசிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

களுத்துறை, ஹீனட்டியங்கல சந்தியில் இருந்து வெட்டுமகட பள்ளி வீதி ஊடாக களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி மற்றும் காலி வீதிக்குச் செல்லும் பிரதான வீதியில் களுத்துறை பிரதேச சபை மற்றும் களுத்துறை நகரசபை எல்லையில் அமைந்துள்ள பாலத்துக்கு அருகில் காணப்படும் குறித்த தரிசுப்பகுதியில் வெளியில் இருந்து வரும் பிரதேச வாசிகள் வீட்டுக் கழிவுப் பொருட்களை பாதை ஓரங்களில் போட்டுச் செல்வதாலேயே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.



களுத்துறை நகரசபை மூலம் இதனை கண்காணித்து தடுக்கும் வகையில் இப் பகுதியில் பொருத்தப்பட்ட சீ.சீ.டீவி கெமரா சில சமூக விரோதிகளால் உடைக்கப்பட்டு உள்ளதுடன் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் வீதி அருகில் வைக்கப்பட்டுள்ள "இந்த இடத்தில் குப்பை கழிவுகளை போடுவதை தவிர்க்கவும்" என்ற பதாகையையும் மறுபக்கம் திரும்பி வைத்து விட்டு குப்பைகளை கொட்டிச் செல்வது வேதனைக்குரிய விடயம் என களுத்துறை நகரசபை தலைவர் ஆமிர் நசீர் தெரிவித்தார்.

களுத்துறை நகரசபை மற்றும் களுத்துறை தெற்கு பொலிசாரும் இணைந்து ஏற்கெனவே இக் குற்றச் செயல்கள் தொடர்பில் மூவரைக் கைது செய்து களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததுடன் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட அவர்களுக்கு தலா 5000 ரூபாய் தண்டம் பணம் விதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## புரவலர் ஹாசிம் உமர் இந்தியா பயணம்



மக்கள் மேம்பாட்டு மாத இதழான நந்தவனம் சஞ்சிகையின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்வதற்காக புரவலரும் புரவலர் புத்தகப்பூங்கா நிறுவுநருமான ஹாஷிம் உமர் நாளை (07) இந்தியா செல்லவுள்ளார். இதனையொட்டிய நிகழ்வுகள் திருச்சி, ஹோட்டல் செவனாவில் திங்கட்கிழமை (10) காலை 9.30 முதல் நண்பகல் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில், புரவலர் ஹாஷிம் உமர், சேலத்தைச் சேர்ந்த முனைவர் கலையமுதன், தஞ்சாவூர் புனிதா கணேசன் மற்றும் லயன் டாக்டர் திருச்சி அச்சர்சிங் ஆகியோர் அலங்கரிக்கவுள்ளனர்.

இவ்வெள்ளி விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள சிறப்பு மலரின் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்ளும் புரவலர் ஹாஷிம் உமர், அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளவுள்ளார்.



முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற தேசிய இலக்கியப் போட்டியில் நான்கு முதற் பரிசுகளைப் பெற்ற கலாதினி உடப்பூர். வை. இராமச்சந்திரன் முந்தல் உதவிப் பிரதேச செயலாளரிடம் இருந்து பரிசினைப் பெற்றுக் கொள்ளுவதைப் படத்தில் காணலாம். (படம்: உடப்பு குறூப் நிருபர்)

# காணி எடுத்தல் சட்டம்

## (அத்தியாயம் - 460)

**7 ம் பிரிவின் கீழான அறிவித்தல்**

**எனது குறிப்பு இலக்கம் :**
**DIVKE/LND/LND2/ ACQUT/5/9**

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் :
**4-3/8/2017 PC/222**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு உரிமை கூறுபவர்கள் தொடர்பில் குறித்த சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்டஈடு தொடர்பான பரிசீலனையை மேற்கொள்ளல் 2022.02.09 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு குளியாப்பிட்டி கிழக்கு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் இடம் பெறும் எனவும் அந்தப் பரிசீலனைக்கு சமுகமளிக்குமாறு உரிமை கூறுபவர்களுக்கு இத்தால் அறிவிக்கப் படுகின்றது - மேலதிக விபரங்கள் தொடர்பாக 2021.11.29 ஆம் திகதிய 2256/3 ஆம் இலக்க அரசாங்க அதிவிஷேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | குளியாப்பிட்டி - கிழக்கு |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | 1093 - இஹல முருதென்கே |
| கிராமம் | : | முருதென்கே |
| காணியின் பெயர் | : | தல்கஹமுலவத்த, கெஸெல்வத்த, மாதங்கஹமுலவத்த, இஹல பிட்டியேவத்த, பட்டதொல எஸ்டேட் |

வரைபட இலக்கம் மற்றும் காணித்துண்டு இலக்கம் :

இ.கி.வ - 14, மேலதிக இலக்கம் 37, தாள் 37.

காணித்துண்டு இலக்கம் - 521, 522, 523

**பிரதேச செயலாளர்,**
**குளியாப்பிட்டி கிழக்கு**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## நொத்தாரிசு இறுதி பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

ராஜ பொக்குன வத்த, தம்பதெனிய என்ற முகவரியில் வசிக்கும் ஹீரலு பத்திரன்னெஹெலாகே ஹரித சுதத் வீரசிங்ஹ ஆகிய நான், நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107) பிரிவு 7ன்படி குருநாகல் மாவட்டம் குளியாப்பிட்டிய மேல் நீதிமன்ற வலயத்தில் சிங்கள மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்ற பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**H.P. ஹரித சுதத் வீரசிங்ஹ**

**ராஜ பொக்குன வத்த,**
**தம்பதெனிய.**
**2022.01.03**

# தேசிய உப்பு நிறுவனம்

## தேசிய உப்பு நிறுவனத்தினால் சாதாரண உப்பை விற்பனை செய்தல்

### வளமுள்ள கொள்வனவாளர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டை (EOI) அழைத்தல்

தேசிய உப்பு நிறுவனம் (NSL) என்பது ஒரு அரசுரிமை நிறுவனமாகும், இது சாதகமான காலநிலையில் ஆண்டுதோறும் 25,000 மெ.தொ. உப்பை உற்பத்தி செய்கிறது. 2022ஆம் ஆண்டில் மன்னார் மற்றும் ஆனையிறவு உப்பளங்களிலிருந்து சாதாரண உப்பை வாங்க ஆர்வமுள்ள தரப்பினரை தேசிய உப்பு நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட வடிவத்தில் ஆர்வமுள்ள கொள்வனவாளர்களிடமிருந்து ஆர்வமுள்ள அளவுகள் மற்றும் விலைகளின் விவரங்களை அளிக்கும் ஆர்வத்தின் வெளிப்பாடு கோரப்படுகிறது.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள EOI ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதார்கள், தேசிய உப்பு நிறுவனத் தலைவருக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிப்பதன் மூலம் பின்வரும் முகவரியிலிருந்து கொள்வனவு செய்யலாம் அல்லது நிறுவனத்தின் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

1. தேசிய உப்பு நிறுவனம், இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.
2. தேசிய உப்பு நிறுவனம், மன்னார் உப்பளம், கிராண்ட் பஜார், மன்னார்.
3. தேசிய உப்பு நிறுவனம், ஆனையிறவு உப்பளம், ஆனையிறவு, கிளிநொச்சி.
4. இணைய தளம்: nationalsalt.lk

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்கள் சகிதம் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா வைப்புச் செய்யப்பட்டமைக்கான வங்கிப் பற்றுச்சீட்டு / பணம் அனுப்பும் அறிவுரைகளை 2022-01-21ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சபையினால் நியமிக்கப்பட்ட விற்பனைக் குழுவினால் ஆர்வத்திற்கான வெளிப்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவுகள் மற்றும் விலைகள் குறித்து அறிவிக்கப்படும். சந்தை நிலைமைகள் மற்றும் நீண்டகால வர்த்தகத்தை கவனத்திற் கொண்டு அளவுகள் மற்றும் விலைகளின் இறுதித் தீர்மானத்தை பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**கைத்தொழில் அமைச்சு,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.**
**தொலைபேசி: 0112368974**
**மின்னஞ்சல்: mslhoc@gmail.com**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -2XXX | NISSAN | HP11 | 1996 |
| KP -1XXX | TATA | NANO | 2011 |
| **லொறி** | | | |
| PQ -3XXX | TATA | ACE | 2011 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| QC -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QD -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QI -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 ஜனவரி 6ஆம், 7ஆம், 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 ஜனவரி 11ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

www.skillsads.com

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

BE BETTER INFORMED!

Dinamina
Daily News
Thinakaran




News you can trust now free on your mobile phone.

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (கைதொநி)

## 2022 ஆம் ஆண்டிற்காக பதவி அலுவலர்களின் போக்குவரத்து சேவைக்காக வாகன வாடகைக்கு அமர்த்துதலுக்கான விலைமனு அறிவித்தல்

**SUP/SD/22/02**

2022 ஆம் ஆண்டிற்காக கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 363 ஆம் இலக்கத்திலுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக வளமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழே கையொப்பமிட்டவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்கள் கைதொநி இனால் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான காலப்பகுதிக்கு கைதொநி உடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

சமர்ப்பிக்கப்படும் அனைத்து தகுதியுள்ள விலைமனுக்களும் மொத்த கேள்விப் பெறுமதியின் 1% ஐ விலைமனுப்பிணையாக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்வியை மூடும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் நிபந்தனையற்றதும் இலகுவாக ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமானதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 3000 ரூபாவைச் செலுத்திய பின்னர் மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், 503ஏ என்ற இலக்கத்திலுள்ள கைதொநி இன் வழங்கல்கள் பிரிவிலிருந்து கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத தொகையாகிய 3000 ரூபாவானது இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரொக்கப் பணத்தில் வரவு வைக்கப்பட்டு வங்கியின் பணவைப்புத் துண்டானது மாலபே, கைதொநி நிதி பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கணக்கின் பெயர் - கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
வங்கி மற்றும் கிளை - இலங்கை வங்கி – டொரிங்டன்
கணக்கு இலக்கம் - 2323303
குறியீடு இலக்கம் - **SUP/SD/22/02**

கேள்விப் படிவங்கள் 2022.01.06 ஆம் திகதியிலிருந்து 2022.01.26 ஆம் திகதி வரையும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.01.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், 503ஏ என்ற இலக்கத்திலுள்ள கைதொநி இன் மனித வளங்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கமானது குறிப்பிடப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், 503ஏ என்ற இலக்கத்திலுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தமானது ஐந்து மில்லியன் ரூபாவிற்கு மேற்படின், 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தில் விதிக்கப்பட்டவாறு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாகும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் இலக்கத்தினூடாக வழங்கல்கள் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 0112-797314/ 0112-797315.

மாலபே, கைதொநி இன் வழங்கல்கள் பிரிவில் இலவசமாக பரீட்சிப்பதற்காக உரித்தான ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்,**
**இல. 503ஏ, ஹல்பராவ கார்டன்ஸ்,**
**தலாஹேன,**
**மாலபே.**

**மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சு - மேல் மாகாணம்**

**மேல் மாகாண வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபை**

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2022

மேல் மாகாண வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபைக்கு 2022 ஆம் ஆண்டில் பண்டங்கள் மற்றும் சேவைகள் மற்றும் ஒப்பந்த சேவைகளை வழங்குவதற்காகப் பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வமுள்ள அங்கீகாரம் பெற்றுள்ள உற்பத்தியாளர்கள், தேசிய முகவர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி இல | உருப்படி இலக்கம் | உருப்படி |
|---|---|---|
| | | **பண்டங்கள் / வழங்கல்கள்** |
| G | 1 | அனைத்து வகையான அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டும் சேவைகள் |
| | 2 | அனைத்து வகையான அலுவலக தளபாடங்கள் (மரப்பலகை/உருக்கு/உலோகம்) |
| | 3 | அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் (நிழற்படப்பிரதியிடல் இயந்திரம்/ வளிச்சீராக்கி இயந்திரம் போன்றவை) |
| | 4 | மோட்டார் வாகனங்கள்/மோட்டார் சைக்கிள் டயர் டியூப்கள் |
| | 5 | தகவல் தொழில்நுட்ப தொகுதியை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல் |
| | 6 | தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் (கணனி மற்றும் துணை உறுப்புக்கள்) |
| | 7 | செயல்பாட்டு முறைமை (Operation System) |
| | 8 | பிரயோக முறைமை (Application System) |
| | 9 | கணனி அச்சு இயந்திரம் டோனர் மற்றும் துணை உறுப்புக்கள், அச்சு மை வகைகள் |
| | 10 | வலையமைப்புத் தொகுதியின் பாதுகாப்பு முறைமை |
| | 11 | தொடர்பாடல் துணை உறுப்புக்கள் (FAX, Mobile Phones/PABX Systems) போன்றவை |
| | 12 | பாதுகாப்புத் தொகுதியை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் (CCTV, Access Security System) |
| | 13 | அனைத்து வகையான கட்டிடப்பொருட்களை வழங்கல் (இரும்புக்கம்பி, கம்பி வகைகள் மற்றும் வர்ணப்பூச்சுக்கள் உட்பட) |
| | 14 | சீருடைகள்/சப்பாத்து/சீருடைகளிற்கான துணை உறுப்புக்கள்/ பயணப்பைகள்/ பாதுகாப்பான உடைகளை வழங்கள் |
| | 15 | தச்சு/மின்சார தொழில்நுட்ப/நீர்க்குழாய்/அலுமினியம் வேலைகளிற்கான உபகரணங்கள் மற்றும் துணை உறுப்புக்கள் |
| | 16 | கட்டணம் மற்றும் காலத்தைக் கணிக்கும் இயந்திரங்கள்/வரவுக்குறிப்பு இயந்திரங்கள் |
| | 17 | சுகாதாரப்பாதுகாப்பு/இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள் |
| | 18 | சூரிய மின்வலுத் தொகுதியை நிறுவுதல் |
| | 19 | பெயர்ப்பலகைகளை (PVC/FLEX/Plastic/Digital) நிர்மாணித்தல் |
| | | **சேவைகள் (உசாத்துணை அல்லாதவை)** |
| S | 1 | அனைத்து வகையான அச்சு நடவடிக்கைகள் மற்றும் புத்தகங்கட்டும் சேவைகள் |
| | 2 | வாகனங்களின் புதுப்பித்தல்கள் மற்றும் சேவைகள் |
| | 3 | மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேவைகள் |
| | 4 | அலுவலகப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேவைகள் |
| | 5 | கணனி/அச்சு இயந்திரங்களின் புதுப்பித்தல்கள் மற்றும் தொகுதி சார்ந்த சேவைகள் |
| | 6 | வளிச்சீராக்கிகள்/மின்பிறப்பாக்கிகளைப் புதுப்பித்தல் |
| | 7 | இறப்பர் முத்திரைகள்/திகதி முத்திரைகள்/ சாவி வெட்டும் சேவைகள் |
| | 8 | விரல் அடையாளப் பொறிகள்/கட்டணங்கணிக்கும் மீற்றர்களைப் புதுப்பித்தல் |
| | 9 | நில அளவை/ஆதனங்கள், இயந்திரத் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பீட்டுச் சேவை |
| | 10 | விழாக்களிற்கான பண்டங்கள் மதிப்பீட்டு சேவை உணவு வழங்கல் சேவைகள் |
| | 11 | வாகனங்கள்/ஆதனங்கள் மற்றும் ஊழியர் காப்புறுதிச் சேவைகள் |
| | 12 | பாதுகாப்பு/சுத்திகரிப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு சேவைகள் |
| | 13 | மின்னியல்/அச்சு ஊடக பிரச்சார சேவைகள் |
| | 14 | போக்குவரத்து மற்றும் குரியர் சேவைகளை வழங்கல் |
| | 15 | பூங்காக்கள் மற்றும் அலுவலக உள்ளக அலங்கரிப்புச் சேவைகள் |
| C | | **உசாத்துணைச் சேவைகளை வழங்கல்** |
| | 1 | சிவில் மற்றும் கட்டமைக்கப்பட்ட பொறியியல் சேவைகள் |
| | 2 | மனித வளங்கள்/கணக்கியல்/பயணிகள் போக்குவரத்து உசாத்துணை சேவைகள் |
| | 3 | செயற்றிட்ட முகாமைத்துவ சேவைகள் |
| | 4 | பட்டய இயந்திரவியல் மற்றும் சிவில்/மின்சார எந்திரவியல் சேவைகள் |
| Con | | **நிர்மாணங்கள்** |
| | 1 | வேலைகளிற்கான ஒப்பந்தக்காரர்களை (ICTAD) பதிவுடன்/பதிவின்றி |
| | 2 | மேசன்/டைல்/மின்சாரம்/நீர்க்குழாய்/தச்சு மற்றும் அலுமினியம் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் |
| | 3 | கட்டிடங்களிற்கு வர்ணப்பூச்சு பூசுதல் |

### வழங்குநர்களை பதிவுசெய்தல் - 2022

### பதிவுசெய்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

01. பதிவுக்கட்டணமாக ரூபா 500/- இற்கான தொகையை பின்வரும் முகவரியிலுள்ள காசாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை பெறுகைப்பிரிவில் சமர்ப்பித்து 2022 ஜனவரி 24 அன்று பி.ப.15.00 வரை பதிவுக்கான நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப் படிவத் தொகுதியை பெற்றுக்கொள்ளலாம்.
02. பண்டங்கள் மற்றும் சேவைகளிற்காகப் பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணம் ரூபா 1250/- என்பதுடன் நிர்மாணத்துறைக்கான ஒப்பந்தப் பதிவுகளிற்கான தொகுதியொன்றிற்கான பதிவுக்கட்டணம் ரூபா.2000/- ஆகும்.
03. பதிவுக்கான கட்டணங்களை, "தலைவர், வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபை, மேல் மாகாணம்" என்ற பெயருக்கு காசோலை மூலமாக அல்லது அலுவலக காசாளருக்கு ரொக்கப்பணமாக செலுத்தலாம். காசோலைகள் பணமாகிய பின்னர் விண்ணப்பப்படிவங்கள் செல்லுபடியாகும்.
04. விண்ணப்பப்படிவமொன்றின் மூலம் தொகுதி ஒன்றுக்காக மாத்திரம் பதிவுசெய்து கொள்ளலாமென்பதுடன், அத்தொகுதியில் அடங்கியுள்ள ஏதேனும் உருப்படிக்களிற்காகப் பதிவு செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களுடன், படிவக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படபிரதியொன்றும் பதிவுக்கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அப்பற்றுச் சீட்டுக்கள் இணைக்கப்பட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
05. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினம், 2022 ஜனவரி 25 என்பதுடன், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அன்றைய தினம் பி.ப.3.00 இற்கு முன்னர் "தலைவர், சிறிய பெறுகைக்குழு, வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபை (மே.மா) இலக்கம் 89, "ரண்மகபாய", தரைமாடி, கடுவெல வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2022" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
06. அனைத்து விண்ணப்பங்களுடனும், வியாபாரப் பதிவுச் சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்று மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) இற்கான பதிவுச்சான்றிதழின் பிரதியொன்று மற்றும் கடந்த வருடங்களில் சேவைகள் மற்றும் வழங்கல்களை மேற்கொண்ட வாடிக்கையாளர்களின் விபரங்கள் இருப்பின் அவ் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். "இக்டாட்" உடைய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்கள் 2022 ஆண்டிற்கான செல்லுபடியாகும் ICTAD சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பான இறுதித்தீர்மானம், அதிகார சபையின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.
07. பொதுவாக பதிவுசெய்யப்பெற்றுள்ள வழங்குநர்களின் பெயர் பட்டியலிலிருந்து வழங்கல்கள்/ சேவைகள் மற்றும் ஒப்பந்த வேலைகளிற்காக விலைமனுக்கோரப்படும். எனினும், போதியளவு வழங்குநர்கள் அல்லது வேலை ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை இல்லாத பொழுது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களில் ஏனைய முன்னணி நிறுவனங்களிடமிருந்து அல்லது இலங்கை டெலிகொம் தொலைபேசி பெயர்பட்டியல் மூலம் விலைமனுக்கோரி கொள்வனவு செய்தல் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை இவ் அதிகார சபைக்கு உரித்தாகும்.
08. பதிவு செய்துகொண்டுள்ள எவரேனும் விண்ணப்பதாரரொருவரின் சேவை அல்லது விலைமனுக் கோரலின் போது எட்டப்படும் போக்கு திருத்தியானதாக அல்லது சிறப்பாக இல்லாத பட்சத்தில் அதற்கான காரணங்களை முன்னிலைப்படுத்தாமல், பதிவுப்பட்டியலில் இருந்து நீக்கும் அல்லது விலைமனுக்களை இடைநிறுத்தும் அதிகாரம், அதிகார சபையின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும். பதிவானது, ஒப்பந்தங்களை வழங்குவதற்கான தகைமையாகமாட்டாதென்பதுடன், அவ்வப்போது மீண்டும் தகைமைகளைப் பரீட்சித்தல் மற்றும் மீளாய்வுக்கு உட்படுத்தல் மேற்கொள்ளப்படும்.
09. இதற்கான மேலதிக விரங்களை 011-2877421 என்ற தொலைபேசி எண்ணின் மூலம், பிரதிப் பொது முகாமையாளர் (நிருவாகம்) அல்லது 011-2887872 (நீடிப்பு 113) மூலம் பெறுகைக்குழுவின் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு :
விண்ணப்பப்படிவங்களுடன் வழங்கப்படும் விரிவான பண்டங்கள்/சேவைகள்/ஒப்பந்தங்களின் பட்டியலிற்கமைவாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**ஓ.டப்ளியூ.ப்ரசன்ன சஞ்ஜீவ**
**தலைவர்**
**வீதிப்பயணப் போக்குவரத்து அதிகாரசபை (மே.மா)**
**இல.89, "ரண்மகபாய", கடுவெல வீதி, பத்தரமுல்ல**
**2022.01.05**

## அபிவிருத்தி லொத்தர் சபை

### நிதி அமைச்சு

# வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2022

2022ஆம் ஆண்டில் இந்நிறுவனத்துக்குப் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் சிவில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்களிற்காக வழங்குநர்கள/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக உரித்தான துறையில் ஆர்வமுள்ள அங்கீகாரம் பெற்ற வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பின்வரும் அட்டவணையில் இதற்கான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு உருப்படிக்குமான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ரூபா 540.00 (வட்வரியுடன்) ஆகும். பதிவுக் கட்டணமானது, ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனியாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும். அப்பதிவுக் கட்டணமானது, ‘அபிவிருத்தி லொத்தர் சபை’ என்ற பெயரில் இலங்கை வங்கி கொள்ளுபிட்டிய கிளை இலக்கம் 1630526 என்ற கணக்கிற்கு வைப்புச் செய்யப்படலாம். கட்டணம் செலுத்தி வங்கியில் பெற்றுக்காள்ளப்படும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன், வழங்குநரின் விண்ணப்பக் கடிதமொன்றை பெறுகைப் பிரிவில் சமர்ப்பித்து அல்லது Procurement@dlb.lk என்ற மின்னஞ்சலிற்கு Scan பிரதியொன்றை அனுப்பி இதற்கான விண்ணப்பப்படிவத்தை மின்னஞ்சல் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2021.11.23 திகதியிட்ட பத்திரிகை அறிவித்தலிற்கமைவாக, ஏற்கனவே விண்ணப்பங்களை ஒப்படைத்துள்ள வழங்குநர்கள் மீண்டும் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை.

04. இதற்கான விண்ணப்பப்படிவங்களை 2022.01.06 முதல் 2022.01.19 வரை மாத்திரம் மேற்கண்டவாறு பெற்றுக்கொள்ளலாம்.

| உருப்படி இலக்கம் | பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கல் தலைப்பு/ உருப்படி |
|---|---|
| 01 | அலுவலக எழுதுகருவிகளை வழங்கல் |
| 02 | அலுவலக தளபாடங்களை வழங்கல் (உருக்குக்கபட்/ மேசைகள், கதிரைகள் போன்ற பண்டங்களை வழங்கல்) |
| 03 | அலுவலக உபகரணங்களை வழங்கல் (கூட்டல் இயந்திரங்கள்/ ரோணியோ/ ஸ்கேன்/ நகல் பிரதிகள்/ தொலைநகல் இயந்திரம்/ நிழற்படப்பிரதி இயந்திரம் போன்ற உபகரணங்கள்) |
| 04 | அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை பராமரித்தல் மற்றும் சேவை செய்தல். |
| 05 | கணனி இயந்திரங்கள், அச்சுப் பொறிகள், UPS ஸ்கேன் போன்ற அலுவலக உபகரணங்களை வழங்கல். |
| 06 | கணனிகளை சேவை செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 07 | நிழற்படப்பிரதி இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்கல் |
| 08 | i. ஊழியர் பயிற்சிப் பாசறைகளிற்காக வளங்கள் மூலம் பங்களிப்புச் செய்தல். |
| | ii. பணிக்குழாமின் விடயப்பரப்புக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்ட சேவைகளை வழங்கல். |
| | iii. பணிக்குழாமிற்கான வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை (Out bound Trainings Programs) வழங்கல் சேவைகள் |
| 09 | குடிநீர் போத்தல்களை வழங்கல் |
| 10 | அச்சுச் சேவைகளை வழங்கல் (அனைத்து வகையான பொதுவான அச்சு வேலைகள், சஞ்சிகைகள் போன்றவை வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அச்சிட்டு வழங்கல். |
| 11 | வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அச்சிட்டு வழங்கல். |
| 12 | கணனி எழுது கருவிகளை வழங்கல் (Ribbon N.C.R 2 ply and 3 ply computer sheets. etc/ USB/CD/DVD/ Cartridge/ Toner) |
| 13 | கணனி வயைமைப்பை வழங்கல் |
| 14 | டயர் மற்றும் டியுப்களை வழங்கல் |
| 15 | மொழி பெயர்ப்புச் சேவைகளை வழங்கல் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) |
| 16 | பண்டங்களை விநியோகிக்கும் தூதுத்சேவை வழங்கல் (Courier Service) |
| 17 | வரி மதிப்பீட்டுக்கான ஆலோசணைச் சேவையை வழங்கல் |
| 18 | கணனித் தொகுதியை தயாரித்து, நிறுவுவதற்கான ஆலோசணைச் சேவை |
| 19 | சதைவடைந்த இரும்பு மற்றும் தகடு, அப்புறப்படுத்தப்படும் டயர்/ டியூப்களைக் கொள்வனவு செய்வோர். |
| 20 | CCTV கெமராக்களை நிறுவுதல், பராமரித்தல் புதுப்பித்தல் |
| 21 | சிதைவடைந்த பிளாஸ்டிக் சிதைவடைந்த கணனி மற்றும் துணை உருப்புக்களைக் கொள்வனவு செய்தல். |
| 22 | பாவனையிலிருந்து அகற்றப்படும் கடதாசிகள் மற்றும் செல்லுபடியற்றதாக்கப்பட்ட டிக்கட்களைக் கொள்வனவு செய்தல். |
| 23 | தொற்றுநீக்கிப் பதார்த்தங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்டபுப் பதார்த்தங்களை வழங்கல் (Sanitizer, Face Mask, Hand Wash) |
| 24 | சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உருப்படிகளை வழங்கல் கெப்/ கோப்பைகள்/ டீசர்ட்/ கூட்டல் இயந்திரங்கள்/ கடிகாரம்/ குடைகள் போன்றவை, கெனொபி, பூங்காக் குடைகள், மழைஅங்கிகள் வழங்கல்) |
| 25 | வாடகை/ குத்தகை அடிப்படையில் சிறிய மற்றும் பாரியளவிலான அறிவித்தல் விளம்பரப் பலகைகளை வழங்கல், நிர்மாணித்தல் (Hordings) |
| 26 | கண்காட்சிகளிற்காக வர்த்தக கூடங்களை காட்சிக்கூடங்களை நிர்மாணித்தல் |
| 27 | வாகனங்கள் மற்றும் விற்பனைக் கூடங்களிற்கு ஸ்டிக்கர் பண்ணுதல், லொத்தர் விற்பனைக் கூடங்களை அமைத்தல் |
| 28 | சீலையினாலான பதாகைகளை அச்சிடல் மற்றும் டிஜிட்டல் அச்சு வேலைகளை வழங்கல் |
| 29 | தொலைக்காட்சி/ வானொலி விளம்பரங்களைத் தயாரித்தல் வழங்கல் (Production House) |
| 30 | விளம்பர அறிவித்தல் சேவைகளை வழங்கும் முகவர்கள் (TV, Redio, Press, Outdoor) விளம்பர - ஆக்கங்களை நிர்மாணித்தல் |
| 31 | ஊடகங்களைக் கொள்வனவு செய்தல் (Media Buying) |
| 32 | தொலைக்காட்சி அறிக்கை நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்போர், டெலிநாடகத் தயாரிப்பாளர்கள் |
| 33 | வீடியோ பண்ணுதல், புகைப்படம் பிடிக்கும் சேவைகளை வழங்கல் |
| 34 | புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அச்சிட்டு வழங்கல். |
| 35 | வர்த்தக சந்தையில் ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்தல் நிறுவனம். |
| 36 | விழாக்களை முகாமைத்துவம் செய்யும் நிறுவுனம் (Outdoor Events Management) (விழாக்களை ஏற்பாடு செய்தல்/ தேவையான உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல்/ தேவையான மனித வளத்தை வழங்கல்) |
| 37 | i. டிஜிட்டல் விளம்பரங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பிரசாரம் செய்வதற்காக எண்ணக்கரு ஆக்கங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் டிஜிட்டல் விளம்பரங்களைத் தயாரித்தல். |
| | ii. டிஜிட்டல் பிரசார நடவடிக்கைகளிற்கான விளம்பர அறிவித்தல் சமூகவலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் விளம்பரப்படுத்தல் பின்னனியை ஏற்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் இற்றைவரை ஆக்குதல். |
| | iii. குறுகியகால டிஜிட்டல் விளம்பர நடவடிக்கைகளிற்காக சமூகவலைத்தளங்களில் நடைமுறைச் சேவை தொடர்புகளைப் பேணும் மேற்தர பரிசீலகர்கள் அடங்கிய நபர்கள்/ நிறுவனங்கள் (Youtube, Facebook, Instagram. etc. Channels) கருமப் பொறுப்பு வழங்கல் முறைமை மற்றும் தினசரி கட்டணம் செலுத்தும் முறைமையின் பிரகாரம் சேவை வழங்கல். |
| 38 | வாகனங்களைப்பழுது பார்த்தல் |
| 39 | வாகன தகடுவேலைகள் மற்றும் வர்ணம் பூசுதல் |
| 40 | வாகன வளிச்சீராக்கிகளைப் புதுப்பித்தல். |
| 41 | வாகனங்களை சேர்விசு பண்ணுதல் |
| 42 | வாகனங்களின் மின் தொகுதியைப் புதுப்பித்தல் |
| 43 | வாடகை அடிப்படையில் கார், வேன், லொறி வண்டிகளை வழங்கல் |
| 44 | வாகனங்களைக் குஷன் பண்ணுதல், காபட் மற்றும் டின்டட் பண்ணுதல் |
| 45 | கட்டிடங்களின் மின்சார வயர் இணைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மின்சாரப் புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 46 | கட்டிட வளிச்சீராக்கிகள் மற்றும் புதுப்பித்தல் சேவைகளை வழங்கல் |
| 47 | கட்டிட நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரர்கள் (CIDA) பதிவுடன் |
| 48 | சிறியளவிலான புதுப்பித்தல்கள் மற்றும் பராமரிப்பு (CIDA) பதிவு இன்றி) கட்டிட பூச்சுவேலைகள் குளியலறைகள்/ நீர்க்குழாய் துணை உறுப்புக்களை நிறுவுதல், டைல் பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் உட்பட. |
| 49 | பட்டயம் பெற்ற கட்டிடநிர்மாண வல்லுநர்களின் சேவையை வழங்கல் |
| 50 | பட்டயம் பெற்ற பொறியியலாளர் சேவைகளை வழங்கல் |
| 51 | சட்ட ஆலோசணைச் சேவைகளை வழங்கல் |
| 52 | அளவையியல் சேவை வழங்கல் |

பெறுகைப் பிரிவினால் வழங்கப்படும், விண்ணப்பப் படிவத்தை உரியவாறு பூரணப்படுத்தி 2022.01.25ஆம் திகதிக்கு முன்னர், தலைவர், அபிவிருத்தி லொத்தர் சபை, இலக்கம் 356 டாக்டர் கொல்வின் ஆர் டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இவ்வலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் ஒப்படைத்தல் மேற்கொள்ளலாம். குறித்த விண்ணப்பதாரர், கம்பனியொன்றாக/ கூட்டு வியாபார மொன்றாக/ தனி நபர் வியாபாரமொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பதிவுச் சான்றிதழின் சான்று பகரப்பட்ட நிழற்படப் பிரதியொன்று விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் ‘2022ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல்’ எனக் குறிப்பிடல் வேண்டும்.

இதற்கான மேலதிக தகவல்களை தொ.பே.இல. 076-3162426, 076-9475871 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பிரதான நிறைவேற்று அலுவலர்**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, டாக்டர் கொல்வின் ஆர் டீ சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு - 02**
**தொ.பே.இல. 011-4824856**
**இணையம்: www.dlb.lk**

# விலைமனுக் கோரல்

## யட்டிநுவர பிரதேச சபை மின் பிறப்பாக்கி வழங்குதலும் அதனைத் தாபித்தலும்

யட்டிநுவர பிரதே சபைக்குப் பின்வரும் வகையிலான மின் பிறப்பாக்கி ஒன்றை வழங்குவதற்கெனத் தகைமை பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

| | ITEM | MANUFACTURING COUNTRY | RATE (WITHOUT VAT) | RATE (WITHOUT VAT) |
|---|---|---|---|---|
| 01 | SUPPLY AND INSTALLATION OF THE SILENT TYPE 35 KVA THREE PHASE GENERATOR | | | |
| 02 | SUPPLY AND INSTALLATION OF THE ATS PANEL | | | |
| 03 | INTER CONNECTION ATS PANEL. WITH EXISTING MDB | | | |
| | TOTAL | | | |

1. மீளளிக்கப்படாத 2000.00 இற்கான தொகையை அலுவலக நேரத்தில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை அலுவலகத்தில் செலுத்தி உரிய கேள்விமனு பற்றிய ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
2. கேள்விமனுக்களை 2022 சனவரி மாதம் 8ம் திகதியிலிருந்து 2022 பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதிவரை மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட கேள்விமனுக்களை 2022.02.09 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் தவிசாளர் / கேள்விமனுக்குழுத் தலைவர், யட்டிநுவர பிரதேச சபை, பிலிமதலாவ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க முடியும் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள (கேள்விமனுப் பெட்டியில் இட முடியும்.
3. வற் வரி அறவிடப்படுமெனின் வற் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. கேள்விமனுக்களைக் கொண்டுள்ள கடித - உறையின் இடது பக்க மேல் முலையில் “மின் பிறப்பாக்கி ஒன்றுக்கான கேள்விமனு” எனக் குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.
5. தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடியாக அவை திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள முடியும்.
6. கேள்விமனுக்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தவிர்க்க முடியாத காரணங்களை முன்னிட்டு (கொவில் 19 நிலைமை) வருகைதந்து பெற்றுக்கொள்ள இயலாத நிலை காணப்படுமெனின், மீளளிக்க முடியாத குறித்த கட்டணத்தை இலங்கை வங்கி பிலிமதலாவ கிளையில் பேணப்பட்டுவரும் 2602290 இலக்க கணக்கில் செலுத்திப் பெறப்பட்ட டிஜிற்றல் பற்றுச்சீட்டை உத்தியோகபூர்வ yatinuwarapradeshiyasaba@gmail.com. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி குறித்த கேள்விமனுக்களை தமது மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ள இயலும்.
7. மேலதிக விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமெனின், 081 257 5475 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியம்,
8. கேள்வமலும் கமிட்டியின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

**ஆர்.என்.கே.ரூபஸ்ஸர**
**யட்டிநுவர பிரதேச சபை தவிசாளர்**
**கேள்விமனுக் கமிட்டியின் தலைவர்**

**மஹாவலி வலயங்களின் குடியேற்றங்களின் கால்வாய் மற்றும்**
**பொதுவான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கான இராஜாங்க அமைச்சு**

## இலங்கை மஹாவலி அதிகாரசபை

# விலைமனு அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்காக 2022.01.28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணி வரையும் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்தின் 9 ஆம் மாடியின் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலையின் விளக்கம் | தேவைப்படும் CIDA துறை மற்றும் பதிவுத் தரம் | விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஒவ்வொரு தொகுதிக்குமான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01. | DDG/TS/CON/B/JC/35 | ‘B’ முறைமையில் 0+000 கி. மீற்றலிருந்து 52+000 கி.மீற்றர் வரை மாதுறுஓய இடது கரை பிரதான கால்வாயில் இரண்டாம் கட்ட காடு வளர்ச்சி சுத்தம் செய்தல் மற்றும் கால்வாய் அணைக்கட்டை பராமரித்தல் (பெசேவ நீங்கலான மதிப்பீடு 14.5 மில்.ரூபா, ஒப்பந்தக் காலப்பகுதி 365 நாட்கள்) | நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப் பிற்காக சி-6 அல்லது மேற்பட்டது. | 5,000.00 |
| 02 | DDG/TS/NCB/H/IRR/36 | மீகலேவ தொகுதியின் குடாகத்நோறுவ குளக்கட்டு மேம்படுத்தல் (பெசேவ நீங்கலான மதிப்பீடு 5.7 மில்.ரூபா, ஒப்பந்தக் காலப்பகுதி 150 நாட்கள்) | நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப் பிற்காக சி-6 அல்லது மேற்பட்டது. | 3,000.00 |
| 03 | DDG/TS/CON/H/B/37 | ஏச் முறைமையில் கலாவெவவில் MSO Accommodation இற்கான பழுதுபார்த்தல்கள் (பெசேவ நீங்கலான மதிப்பீடு 3.4 மில்.ரூபா, ஒப்பந்தக் காலப்பகுதி 90 நாட்கள்) | கட்டிட நிர்மாணத்தில் சி-8 அல்லது மேற்பட்டது | 2,000.00 |

ஒவ்வொரு வேலைக்கெதிராகவும் CIDA பதிவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரம் மற்றும் பதிவையும் ஒப்பந்தப் பெறுமதியானது 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாகவிருக்கும் பட்சத்தில் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்ட ஏற்பாட்டின் கீழ் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு பெற்ற விலைமனுதாரர்கள் மாத்திரமே விலைமனுக்கோரலை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகைகள் ஒவ்வொன்றினதும் மொத்த ஆகுசெலவு மதிப்பீடுகள் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 2021.02.18 ஆம் திகதியிடப்பட்டதும் 04/2016(iii) என்ற இலக்கத்தையுமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும். 2021.01.11 ஆம் திகதியிடப்பட்டதும் 03/2020(ii) என்ற இலக்கத்தையுமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு நிபந்தனைகளும் பிரயோகப்படுத்தப்படும்.

2022.01.06 ஆம் திகதியிலிருந்து 2022.01.27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதிக்கும் மேலே வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்தின் 3 ஆம் மாடியின் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் தொழில்நுட்ப சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கம்பனி/ நிறுவன தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது **ddgts.masl@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமாக ஹைபிட் பார்க் இலங்கை வங்கி கிளையின் 2327542 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பெயரில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் வங்கி பணக்கொடுப்பனவு துண்டுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் வளமான விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பிப்பவர்களுக்கு தூதஞ்சல் மூலமாக விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். ஒரு கேள்விக்கு மேலதிகமாக விலைமனுக்களை விலைமனுதாரர் சமர்ப்பிப்பதற்கு இயலுமாயினும் CIDA பதிவின் கொள்ளளவு எல்லைகளுக்கமைவாகவே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் **http://mahaweli.gov.lk** என்ற இணையதளத்தில் பார்வையிடவும் பரீட்சித்தலுக்குமாக காட்சிப்படுத்தப்படும்.

2022.01.28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் பணிப்பாளர் நாயகம், இலங்கை மஹாவலி அதிகாரசபை, 9 ஆம் மாடி, இல. 500, **T.B.** ஜாயா மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் அவற்றை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக அல்லது தூதஞ்சல் வழியாக அனுப்பப்படலாம். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். விலைமனுக்களை திறக்கும் கூட்டத்திற்கு நேரடியாக பங்குபெறுவதற்கு இயலாமலிருப்பவர்களுக்காக 2022.01.28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனுக்களை திறக்கும் கூட்டமானது zoom தொழில்நுட்பவியல் மூலம் நடாத்தப்படும்.

தற்போதுள்ள கோவிட்-19 தொற்று நிலைமையை தவிர்ப்பதற்காக இயலுமானவரையில் இலத்திரனியல் ஊடகத்தை பாவிக்குமாறு விலைமனுதாரர்கள் ஊக்குவிக்கப்படுத்துகின்றனர்.

மேலதிக விபரங்கட்கு, இலங்கை மஹாவலி அதிகாரசபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-2689651, 011-2687475. மின்னஞ்சல்: **ddgts.masl@gmail.com.**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மஹாவலி அதிகாரசபை.**

## இலங்கை துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/08/054 | Spares for UD Nissan PF6/PF6TA Engines | 30,000.00 | 1,000.00 | 27-01-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/10/054 | Over Board Valves for the Launches Pilot 14 & 15 | 30,000.00 | 1,000.00 | 27-01-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/20/061 | Spares for TCM FD 25 – T6 Fork Lift Truck List - 09 | 60,000.00 | 1,000.00 | 27-01-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜனவரி 07ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

(கூட்டுறவு சேவை விற்பனை அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு)

## வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2022

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதன் கீழேயுள்ள முகவரியில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் மாவட்ட அலுவல்களுக்கு வாடகை அடிப்படையில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேன்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் அரசாங்க அதிபர் / மாவட்ட செயலகங்களுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ளது.)

**நிபந்தனைகள்**

01. 5 - 7 நபர்கள் பிரயாணம் செய்யக்கூடிய வேன்
02. வாகனம் ஓட்டத்திற்கு தகைமையானதென தொழில்நுட்ப சான்றிதழ் (தகைமைச் சான்றிதழ்) பெற்றிருத்தல் வேண்டும். (பிரதியொன்றை வழங்குதல் வேண்டும்)
03. வாகனங்கள் வழங்குதல் சாரதி மற்றும் எரிபொருளுடன் அல்லது சாரதி மற்றும் எரிபொருள் இன்றி இடம்பெறலாம்.
04. வாகனத்திற்காக செல்லுபடியாகும் முழுமையான காப்புறுதி காப்பீட்டை பெற்றிருத்தல் வேண்டும்.
05. வாகனத்தின் பழுது பார்த்தல் மற்றும் சேவை விடயங்கள் வழங்குநர்களால் இடம்பெறல் வேண்டும்.
06. வழங்குநர்களால் ஒப்பந்த காலத்திற்குள் தொடர்ந்து சேவை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
07. ஓட்டத்தின் கிலோமீற்றர் அளவிற்காக ஒரு கிலோமீற்றருக்கு இணங்கியுள்ள வாடகைத் தொகையின் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவுகள் இடம்பெறும்.
08. வழங்குநர் அன்றாட ஓட்டக் குறிப்புக்களை நடத்திச் செல்லல் வேண்டும்.
09. வாகனத்தின் ஆபத்துக்கள் அல்லது வேறு ஆபத்துக்கள் சம்பந்தமாக காணப்படும் சட்டத்திற்கு அமைவாக செயற்படுவதற்கு வழங்குநர் இணங்குதல் வேண்டும்.
10. வாகனத்தில் பிரயாணம் செய்யும் அதிகாரிகளின் மற்றும் கொண்டு செல்லும் பொருட்களின் பாதுகாப்பு சம்பந்தமாக மாவட்ட தலைவரால் வழங்கப்படும் அறிவுரைகளை செயற்படுத்துதல் வேண்டும்.
11. வாகனத்தை முறையாக பராமரிப்பதுடன், சுத்தமான நிலையில் நடத்திச் செல்லல் வேண்டும்.
12. தற்போதுள்ள தொற்றுநிலை மற்றும் அதற்கு சமமாக சுகாதார பிரிவினால் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வாகன பராமரிப்பை மேற்கொள்ளல் வேண்டும்.
13. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022.12.31 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

வழங்குநர்கள் கீழ்க்காணும் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைவாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பம்**

**வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் - 2022**

01. வழங்குநரின் பெயர் :..........
02. முகவரி :..........
03. தொலைபேசி இல :..........
04. விலைமனுக்கள் சகல மாவட்டங்களுக்கும் செல்லுபடியாவதுடன், அவ்வாறு இல்லையெனில் பெயருடன் பொருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட மாவட்டங்களை குறிப்பிடுங்கள் : ..........
..........
05. தேசிய அடையாள அட்டை இல : .......... வியாபார பதிவு இலக்கம் :..........
06. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வாகனத்தின் விபரம் :..........
07. வாகன இலக்கம் :..........
08. வாகன வகுப்பு :..........
09. வாகன வகை :..........
10. பிரயாணம் செய்யக்கூடிய பிரயாணிகளின் எண்ணிக்கை :..........
11. மைலோ, மீற்றரில் குறிப்பிடப்படும் கி.மீ அளவு ஓட்டத்தூரம் குறிப்பிடப்படும் மீற்றர்
12. வாகனத்தை பதிவு செய்த வருடம் சாரதி மற்றும் எரிபொருளுடன் சாரதி மற்றும் எரிபொருள் இன்றி
13. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் காற்றுச்சீராக்கியுடன் ரூ.......... ரூ. ..........
(ரூ) (1கி.மீ.இற்கு) காற்றுச்சீராக்கியின்றி ரூ.......... ரூ..........
14. முழுமையான காப்புறுதியை பெற்றுள்ளீர்களா?..........
15. காப்புறுதி சான்றிதழ் செல்லுபடியாகும் காலம் :..........
16. வாகனத்திற்கான தொழில்நுட்ப அறிக்கையின் பிரதியொன்றை இணைக்கவும்

மேற்படி வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்காக வழங்குநர்களை பதிவுசெய்தல் - 2022 இல் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

.......... .......... .......... ..........
கையொப்பம் பெயர் முகவரி தொ.பே இலக்கம்
..........
திகதி

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேன் அல்லது ஏனைய வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுவதுடன், உங்களது விலைமனுக்களை மேற்படி விண்ணப்பத்திற்கு அமைவாக அனுப்புதல் வேண்டும். குறித்த விலைமனுக்கள் 2022.01.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத்தபாலில் அல்லது தலைமையகத்தில் அதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள பெட்டிக்கு சமர்ப்பிக்கலாம். விலைமனுக்களுக்கான இறுதித் தீர்மானம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் 2022" என்று குறிப்பிடல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**
**இரண்டாம் மாடி, சதோச செயலக கட்டிடம்,**
**இல.27, வொக்ஷால் வீதி, கொழும்பு - 02**
**தொ.பே இல - 011-7755456/7**

## விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| | | | **சேவைகள்** | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/001** வாடகைக்கு மோட்டார் கார் மின் பொறியியலாளர் (விநியோக கட்டுமானம்)- திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 26-01-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/002** வாடகைக்கு வான் தகவல் தொழிநுட்பவியலாளர் (கிழக்கு)-திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 26-01-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/003** வாடகைக்கு வான் பொறியியல் உதவியாளர் – கல்முனை (இரண்டு வருட காலம்) | 26-01-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/004** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (வர்த்தகம்)-வாழைச்சேனை (இரண்டு வருட காலம்) | 26-01-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம், (வாழைச்சேனை) 065-2225882 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக் கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக் கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

## வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

இலங்கையின் விநியோக அமைப்பொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையுமான கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய ஏழு கிளைகளையும் 500,000 இற்கு மேலான வாடிக்கையாளர்களுக்கு சேவைபுரிவதுடன் 1500 ஊழியர்களுடனான தொழிற்படையையும் கொண்டுள்ளதுடன் பின்வரும் பதவிக்கான தகைமையுள்ள நபர்களை தேடுகின்றது.

**1. விடுமுறை பங்களா பராமரிப்பவர் - கதிர்காமம்**

| | |
|---|---|
| **கல்வித் தகைமைகள்** | க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் அடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் 6 சித்திகள். |
| **அனுபவம்** | விடுமுறை பங்களா பராமரிப்பவராக 5 வருட அனுபவம் இருத்தல். |
| **ஏனைய தகைமைகள்** | உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவு வகைகளை தயாரிப்பதில் சிறந்த மற்றும் பல்துறை அனுபவம் மற்றும் ஆற்றல் (உணவு மற்றும் குடிமங்கள்), வருகை தருபவர்களை வரவேற்றல் மற்றும் விடுமுறை விடுதியொன்றின் பராமரிப்பு வேலைகளில் அனுபவம். |
| **வயது** | 2022.01.16 ஆம் திகதியன்று 45 வயதிற்கு குறைவாகவிருத்தல். |

ஏனைய பல்வகையான நன்மைகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

விபரமான சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை கீழேயுள்ள முகவரிக்கு 2022 சனவரி 16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அனுப்பவும்.

விண்ணப்பிக்கும் பதவி பெயரானது விண்ணப்பத்திலும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையிலும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

LECO

**மனித வளங்கள் மற்றும் நிருவாக தலைவர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**
**3 ஆம் மாடி, ஈ.ஏச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

## பெயர் மாற்றம்

கொழும்பு-15, இல. 92/41, சென்ற் மேரிஸ் லேன் மட்டக்குளியை சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. 753200355V ஐ கொண்ட ஜெயசீலன் டேமியன் ரமேஷ்காந்த் ஆகிய நான் இன்று முதல் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை முகமட் பாரிஸ் எனவும் எனது பிள்ளைகளான ரமேஷ்காந்த் முகமட் ஆஷிக், ரமேஷ்காந்த் முகமட் அம்ரி ஆகிய பெயர்களை பாரிஸ் முகமட் ஆஷிக், பாரிஸ் முகமட் அம்ரி என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் அவ்வாறே சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**முகமட் பாரிஸ்.**

Repeat Your Ad For Better Offers

# இலங்கை பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## உரிமத்தை நீட்டிப்பதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") ஆனது இத்தால் அறியச் செய்வது யாதெனில், பின்வரும் நபருக்கு, மின்சாரத்தைப் பிறப்பிக்கும் நோக்கத்தில், நுகர்வோருக்கு மின்சாரவழங்கலின் தயார்நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக, மின்பிறப்பாக்க உரிமத்தை நீட்டிக்க தீர்மானித்துள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | ஆலை/வசதி பெயர் | திறன் (MW) | தொழில்நுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/21/49 | பெம்ஸ் ஹைட்ரோ (பிரைவேட்) லிமிடெட் | கெஹல்கமு ஓய மினி நீர் மின்நிலையம் | 3.0 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கைவங்கி வர்த்தகக்கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.01.06

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/ PT/13 /57 | Marine Quality Paint and Thinner for Tug Vijayabahu | 50,000.00 | 1,000.00 | 2022.01.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குனராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 சனவரி 07 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## போதனா வைத்தியசாலை - கராப்பிட்டிய

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சார்பாக, பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுவானது இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை அம்சம் | விலைமனுதாரருக்காக தேவைப்படும் தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அடிப்படை ஆகுசெலவு (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2022/2023 ஆண்டுகளுக்கான கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கான ஸ்பிலிட் வளிச்சீராக்கல் சேவை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் | வளிச்சீராக்கல் இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் பராமரிப்பிற்கான ஒப்பந்தக்காரர்கள் | 3,500.00 | 107,000.00 | 10.7 |

1. கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே விலைமனுவானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.01.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
3. 2022.01.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறத்தலில் பங்குபெறலாம்.
4. விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
5. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் கேள்வியை வழங்குதலையும் நிராகரிப்பதற்குமான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

தொடர்பிலக்கங்கள்: 091-2232250, 091-2232176, 091-2232153

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய,**
**காலி.**

04.01.2022.

## இலங்கை துறைமுக அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/17/060 | 50 Nos. Motor Tyres 1100X20 16 PLY | 25,000.00 | 1,000.00 | 28-01-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜனவரி 07ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/ PT/6253(EL) | 24 Nos, Torque Motors for ZPMC Yard Cranes | 70,000.00 | 1,000.00 | 2022.02.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6252(MP) | Spares for Caterpillar C-15 Engines of ZPMC 41T RTGC at JCT | 80,000.00 | 1,000.00 | 2022.02.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6258(MP) | Spares for Caterpillar C-15 Engines of ZPMC 41T RTGC at JCT | 400,000.00 | 3,500.00 | 2022.02.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குனராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 சனவரி 07 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**



# சவாட் (Savate Kickboxing) குத்துச் சண்டை

# இலங்கையிலிருந்து பாகிஸ்தான் செல்லும் 12 வீர வீராங்கனைகள்




68ஆவது தேசிய விளையாட்டான சவாட் கிக் குத்துச் சண்டை (Savate Kickboxing) விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து பாகிஸ்தானில் நடைபெறும் போட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 13 ஆம் திகதி 12 விளையாட்டு வீர வீராங்கனைகள் விஜயம் செய்யவுள்ளனர்.

கண்டி மாவட்ட மற்றும் மாகாண விளையாட்டு கழகங்களின் ஏற்பாட்டில் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் உள்ள 68 வது தேசிய விளையாட்டான சவாட் கிக் குத்துச் சண்டை (Savate Kickboxing) விளையாட்டு தரப்படுத்தல் செயமலர்வு கம்பளை தி. மு. ஜயரட்ன கேட்போர் கூடத்தில் கண்டி மாவட்ட விளையாட்டு கழகத்தின் தலைவர் டி. எம். நௌசாட் தலைமையில் இடம்பெற்றது.

இரு நாள் நடைபெற்ற இந்த தரப்படுத்த தெரிவில் இறுதி நாளன்று பிரதம அதிதியாக கண்டி மாவட்ட சவாட் கிக் குத்துச் சண்டை கழகத்தின் போசகரும் கம்பளைத் தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முஸ்லிம் விவகாரச் செயலாளரும் சமூக, அரசியல் செயற்பாட்டாளருமான சாமஸ்ரீ தேசகீர்த்தி பஸ்லான் பாரூக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம அதிதியான இவ்விளையாட்டுச் சம்மேளனத்தின் தேசிய தலைவர் பிரசாத் விக்கிரமசிங்க மற்றும் பயிற்றுவிப்பாளர்களினால் தெரிவு செய்யப்பட்ட வீர வீராங்கனைகளுக்கு வர்ணப் பட்டிகளை அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர்.



## பஸ்லான் பாரூக்

இன்று இளம் வாலிபர்கள் விரக்தி மனப்பான்மையோடு வாழும் சூழலில் பாதுகாப்பு பெற வேண்டுமாயின் தன்நம்பிக்கையூட்டக் கூடிய விளையாட்டுக் கலைகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். பாடசாலைக் கல்வியை வழங்குவதோடு மட்டுமல்ல பிரத்தியேகமான மன உறுதியினை வலுப்படுத்தக் கூடிய விளையாட்டுக் கலைகளில் பிள்ளைகளை பயிற்றுவிப்பது மிக அவசியமாகும் என்று பஸ்லான் பாரூக் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்

*இன்று இளம் வாலிபர்கள் வெளியே பெரும் சவாலை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எமது பிள்ளைகள் வீட்டில் வாழும் சூழல் வெளியே இல்லை. வெளியே புதுப்புது பழக்கங்கள். புதுப்புது விடயங்கள் என அவர்கள் வேறு ஒரு திசை நோக்கிப் போய்க் இருக்கின்றார்கள். இதனால் பிள்ளைகளை வெளியே அனுப்புவதற்கு பெற்றோர்கள் அச்சப்படுகின்ற ஒரு பயங்கர சூழல் தோன்றியுள்ளது.*

*இது ஆபத்தான விடயமாகும். தற்போது வளரும் இளைஞர் சமூகம் தான் உண்டு, தான் பாடு உண்டு என்ற மனோ நிலையில் ஒரு தனிமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இப்படி ஒரு சமூகம் உருவாகும் என்றால் எமது எதிர்கால இளைஞர்கள்தான் தமது சமூகத்தின் தலைவர்கள் என்று சொல்லுகின்ற அர்த்தம் பொய்ப்பித்துவிடும். இப்படியான சூழலை யாரும் கண் மூடித்தமாக பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. இப் பிள்ளைகள் சமூகமயப்படுத்தப்பட வேண்டும். அதற்கு முதலாது அவர்களுக்கு தன்நம்பிக்கை ஊட்டப்படுவது மிக அவசியமாகும்.*

பரீட்சையில், காதலில் தோல்வியுற்றால் தற்கொலை செய்து கொண்டனர். இது அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது.

தற்போதைய நிலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் தோல்வியுற்ற சிறிய வயது பிள்ளைகளும் தற்கொலைகள் செய்து கொள்கின்றார்கள். இது மிகவும் ஆபத்தான சகிக்க முடியாது செயற்பாடாகும்.

இந்தப் பிள்ளைகள் தன்நம்பிக்கை இழந்து தன் வாழ்க்கை அழித்துக் கொள்கின்றனர். சில வாலிபர்கள் போதை வஸ்துக்கு அடிமையாகி தன்னை தானே அழித்துக் கொள்கின்றனர்.

இவ்வாறான சூழலில் தன்னை பாதுகாத்துக் கொள்ள இயலும் என அவர்களுக்கு தன் நம்பிக்கை ஊட்டி அவர்களைப் பாகாதுக்க வேண்டும். அதற்காக இவ்வாறான விளையாட்டுத் துறைகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களை வழிநடத்த முடியும்.

இந்நிகழ்வில் 15 பெண் பிள்ளைகள் இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர் என்பது சந்தோசமாக இருக்கின்றது.

எதிர்காலங்களில் பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்திற்கும் தற்பாதுகாப்புக்கும் மன வலிமைக்கும் பொருத்தமான விளையாட்டுக் கலைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தச் செய்தல் பெற்றோரின் மிக முக்கியமான கடமையாகும்.

கல்வித் துறையில் கவனம் செலுத்துவதைப் போன்று விளையாட்டுத் துறையிலும் தம்பிள்ளைகள் ஆளுமைமிக்கவர்களாக கட்டி எழுப்பப்பட வேண்டும். பெற்றோர்களாகிய நீங்கள் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் சரி வெற்றிபெற முடியும் என்பதை பிள்ளைகளுக்கான சிறந்த வழிகளைக் காட்டுங்கள். பிள்ளைகள் மத்தியில் மறைமுகமாக கிடப்பிலுள்ள திறமைகளை வெளிக்கொணர கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை கற்றுக் கொடுங்கள். இதற்கு பெற்றோர்களது பங்கு முக்கியமானது.

இவ்வாறான வேலைத் திட்டங்களை ஏற்பாடு செய்து நடத்துபவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படியான வேலைத் திட்டம் மாவட்ட மட்டத்தில் மட்டுமல்ல முழு நாட்டிலும் உள்ள கிராமத்திற்கு கிராமம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே இன்று ஒவ்வொரு பிள்ளைகளுடைய பாதுகாப்பு கவசமாக விளையாட்டுத் துறையும் உள்ளன. இந்த விளையாட்டுத் துறையின் மூலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதோடு மனத் தைரியத்தையும் நம்பிக்கையையும் வலுவூட்டக் கூடியதாக அமையும்.



## பிரசாத் விக்கிரமசிங்க

தேசிய சர்வதேச பயிற்றுவிப்பாளரும் பிரன்ஸ் சவாட் கிங் குத்துச் சண்டை விளையாட்டுச் சம்மேளனத்தின் தேசிய தலைவர் பிரசாத் விக்கரமசிங்க,...

கொரோனா தொற்று சற்றுத் தணிந்து இலங்கை குத்துச் சண்டை கழகத்தின் தரப்படுத்தல் போட்டித் தெரிவு இடம்பெறுகிறது. இது வரவேற்றக்கதக்க விடயமாகும்.

கொரோனா காலத்தில் வீடுகளில் எமது விளையாட்டு வீர வீராங்கனைகள் முடங்கியிருந்தாலும் மீண்டும் அதன் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு தரப்படுத்தல் போட்டியில் பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொள்வதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

எமது நாட்டில் சவாட் கிங் குத்துச் சண்டையும் ஒரு தேசிய விளையாட்டாகும். எங்களுடைய பிள்ளைகளுக்கு எந்தவிதமான பாதகமின்றி அவர்கள் சர்வதேச மட்டத்தில் போட்டியில் கலந்து கொள்வதற்கு மிகவும் பொருத்தமான அமைப்பு ஸ்ரீலங்கா தேசிய விளையாட்டுக் கழகம் ஆகும். நாங்கள் விளையாட்டில் திறன்மிக்க வீரர்களுக்கு வாய்ப்பினை திறந்து கொடுத்துள்ளோம். நாங்கள் வீரர்களுக்கு நெருக்கடி கொடுப்பதில்லை. அவர்களுக்கு தேவையான சக்தியை வழங்குகின்றோம். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தம் தாய் நாட்டுக்கு பெருமையைத் தேடித் தரும் வகையில் சந்தர்ப்பம் அளித்து வருகின்றோம். நீங்கள் விளையாடுவதைப் பொறுத்து நீண்ட பயணம் செய்யலாம்.அதிகாரிகள் என்ற வகையில் நாங்கள் உங்களுக்கு தேவையான பயிற்சிகளையும் வளங்களையும் சக்தியையும் பெற்று தருவோம்.




உங்களது இயன்ற விளையாட்டுத் திறனை வெளிக்காட்டுங்கள்.உரிய முறைப்படி பயிற்சியினை பெற்றுக் கொள்ளுங்கள்.இலங்கையில் இந்த விளையாட்டு மிகவும் துரித கதியில் பிரபல்யம் அடைந்து வருகின்றது.இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் இந்த விளையாட்டு நடைபெறுகின்றன. மாகாண மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் உள்ள விளையாட்டுக் கழகங்களை இணைத்து இதற்குத் தேவையான தலைவர்கள், அதிகாரிகள் நியமனம் செய்து இலங்கையின் உயர்தர நிலைக்கு நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

அதே போன்று எங்களுடைய சம்மேளனம் மிகவும் ஒற்றுமையுடன் செயற்படும் சம்மேளனம் ஆகும். எங்கள் சம்மேளனத்தில் எந்தவிதமான பயன்களையும் எதிர்பார்க்காமல் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கக் கூடிய மிகத் திறன்வாய்ந்த பயிற்று விப்பாளர்கள் இருக்கின்றார்கள். நாங்கள் எதிர்காலத்தில் இந்த சம்மேளனத்தின் மூலம் இலங்கையின் நடைபெறும் ஏனைய விளையாட்டுக்களுக்குள் முதல் நிலைக்கு வரக் கூடிய தரத்திற்கு கொண்டு வருவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம்.

இன்று மத்திய மாகாணம் மற்றும் கண்டி மாவட்ட கழகங்கள் இணைந்து நடத்திய பயிற்சி செயலமர்வுக்கு சகல ஏற்பாடுகளையும் செய்த நௌசாட், மத்திய மாகாண சம்மேளனத்திற்கு சக்தி வழங்கும் இக்கழகத்தின் போசகரான பஸ்லான் பாரூக் உட்பட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## டி. எம். நௌசாட்

கண்டி மாவட்ட சவாட் கிக் குத்துச் சண்டை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் டி.எம். நௌசாட் கருத்து தெரிவிக்கையில்,

விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் 68 வது தேசிய பிரான்ஸ் சவாட் கிங் குத்துச் சண்டை விளையாட்டாகும். நாங்கள் 04 வருடங்களாக இந்த விளையாட்டுப் பயிற்சியினை நடத்தி வருகின்றோம். நாவலப்பிட்டி, கம்பளை. தெல்தோட்டை, வட்டதெனிய, உலுகங்க, உலப்பனை ஆகிய 6 கிளைகள் உள்ளன. இப்பிரதேசங்களில் இந்த விளையாட்டுப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு கிளைகளிலும் 50 மாணவர்கள் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர்.

பொதுவான நான்கு வருடங்களுக்குள் இலங்கை முழுவதும் சுமார் 2000 விளையாட்டு வீர வீராங்கனைகள் இந்தப் பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். கண்டி மாவட்டத்தில் தான் அதிகளவு விளையாட்டு வீரர்கள் உள்ளனர்.

கடந்த 2021 வருடம் பாகிஸ்தான் லாகூரில் நடைபெற்ற இப் போட்டியில் கலந்து கொள்ளவதற்காக 16 வீரர்கள் சென்றிருந்தார்கள். அங்கு சென்ற ஒவ்வொருவரும் தம் திறமைகளைக் காட்டி சம்பியன் வெற்றி இலக்கை அடைந்து வந்துள்ளார்கள். அதில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் தங்கம், வெண்கலம்,வெள்ளிப் பதக்கங்களை வென்று வந்தார்கள்.

பொதுவாக இந்த விளையாட்டு 10 -15, 19-30 வயதின் கீழ் என்ற முறைப்படி போட்டி நடைபெறும்.

இன்று பாடங்கள் கூட சூம் ஊடாக கற்பிக்கப்படுகிறது. உடலுக்கு ஏற்ற பருமன் உடல் ஆரோக்கியம், மன தைரியத்தை வளர்த்தல், நல்ல சிந்தனை போன்ற விடயங்களில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தக் கூடியவர்களாக உள்ளனர். வேறு எந்தவிதமான மோசமான நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்கப்படுகின்றார்கள்.

இம்முறை 2022 0113 பாகிஸ்தான் லாகூரில் நடைபெறும் சவாட் கிங் குத்துச் சண்டை விளையாட்டுப் போட்டியில் 13 விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். 12 வயது முதல் 30 வயது இடைப்பட்டவர்கள் கலந்து கொள்கின்றனர். இந்த விளையாட்டில் மாணவர்களுடைய கவனமும் ஆர்வமும் இருக்குமானால் இன்று அபாயகரமான நிலையில் உள்ள போதை வஸ்துப் பாவனையில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க முடியும். இன்றுள்ள இளைஞர்கள் போதை வஸ்துப் பாவனைக்கு உட்பட்டவர்கள் அதிகரித்த வண்ணம் உள்ளார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வழிகாட்டலும் இல்லை.

இந்த விளையாட்டின் மூலம் இலங்கையில் நற் பிரஜைகளை உருவாக்கலாம். ஸ்ரீலங்கா பிரான்ஸ் சவாட் கிங் குத்துச் சண்டை விளையாட்டுக் கழகத்தில் கண்டி மாவட்டத்தில் 150 பேர் அளவில் பயிற்சிகள் பெற்று வருகின்றார்கள்.இதில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் ஏனையவர்களும் சேர்ந்து அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள். அந்த நல்லதொரு மனோநிலை இருக்கிறது. சர்வதேச போட்டியில் கலந்து கொள்வதற்காக ஒருவர் செல்வதாக இருந்தால் இந்தக் கழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் குறைந்தது தன்னிடம் சாதாரண தொகை பணத்தையாவது வழங்கி அவரை அனுப்புவதற்கென ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இதற்கு அரசாங்கத்தின் பங்களிப்புக்கள் இருந்த போதிலும் தனிப்பட்ட ரீதியிலும் செல்வந்தர்களுடைய ஆதரவுகளுடம் தான் இவ்விளையாட்டு செய்து வருகின்றோம். எமது விளையாட்டுக் கழகத்தின் போசகர் பஸ்லான் பாரூகின் பங்களிப்பு அளப்பரியது.

இது ஒரு சர்வதேச விளையாட்டாகும். இது பிரான்ஸ் நாட்டில் பிரதான விளையாட்டாகும். 2024 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொண்டு சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் பயிற்சிகள் வழங்கி வருகின்றோம்.

இவ்விளையாட்டில் பயிற்சி பெறும் பிள்ளைகள் ஒலிம்பிக்கில் கலந்து ஒலிம்பிக் பதக்கத்தை பெற வேண்டும். தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் விளையாடுவதற்கான முன்னேற்றகரமான பயிற்சிகளைப் பெற்றுள்ளார்கள். அதற்கான தேர்வுகள் நடைபெற்றுள்ளன. அதில் 05 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது பங்களாதேசில் மார்ச் மாதம் நடைபெறலாம். தெற்காசியா விளையாட்டில் வெற்றி பெறும் பட்சத்தில் தொடர்ந்து நடைபெறும் சர்வதேச ரீதியாக நடைபெறும் விளையாட்டுக்களில் பங்கு கொண்டு வெற்றிகளைப் பெற முடியும்.

ஒவ்வொரு கழகங்களுக்கும் ஒவ்வொரு விசேட பயிற்றப்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் இருக்கின்றார்கள். கம்பளை டி. எம். நௌசாட் , நாவலப்பிட்டி பயிற்றுவிப்பாளர் எச். எச். சாகீர் உஸைன், உலுங்கை பயிற்றுவிப்பாளர் முஹமட் சாதிர், வட்டதெனிய பயிற்றுவிப்பாளர் முஹமட் மின்ஹாஜ், கொத்மலை பயிற்றுவிப்பாளர் ஜிஹான் சத்துரங்க, தெல்தோட்டை பயிற்றுவிப்பாளர் முஹமட் நிர்சாட் , அம்பகஸ்தலாவ பயிற்று விப்பாளர் முஹமட் அக்மல் கண்டி பயிற்றுவிப்பாளர் ரொசான் டயஸ் உட்பட 21 பயிற்றுவிப்பாளர்கள் இருக்கின்றார்கள்.

இப்போட்டியில் கலந்து கொள்பவர்களின் பொதுப் பண்பானது ஒத்த வயதையும் ஒத்த உடல் பருமனின் பாரத்தையும் பிரதானமாக கொண்டிருக்க வேண்டும். இதில் பெண்களும் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

இந்தப் போட்டியில் இரு பிரிவுகள் இருக்கின்றன.உடம்புக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் தொடுதல் மூலம் பங்கு கொள்ளுதல், மற்றையது பலமாக தாக்குதல் நடத்துதல் ஆகும். இரண்டு வகையிலான போட்டி விதிமுறைகள் உள்ளன. இது தான் முக்கியமான அடிப்படை அம்சமாகும்.

6-14 வயது வரையிலும் தொடுதல் மூலம் பயிற்சிகள் வழங்கப்படும். இந்கு குறித்த வயது எல்லைக்குள் கலந்து கொள்ளும் வீரர்கள் பலமாக அடிக்க முடியாது. 15-30




இடைப்பட்டவர்கள் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் இரு முறைகளிலும் பயிற்று விக்கப்பட்டு அவர்களுக்கு தரப்படுத்தல் வழங்கி தேர்வுகளைச் செய்து வருகின்றோம். இது பாடசாலை பிள்ளைகளுக்கு பொருந்தக் கூடிய விளையாட்டு. இதில் யாருக்கும் எந்தவிதமான காயமோ தாக்குதலோ இன்றி விளையாடும் விளையாட்டு ஆகும். போட்டியில் தொடுகையினைக் கொண்டுதான் புள்ளிகள் வழங்கப்படும். இவ்விளையாட்டின் மூலம் தேசிய மட்டத்தில் கிடைக்கப் பெறும் சான்றிதழ்களுக்கு பல்கலைக்கழக இஸட் இஸ்கோர் வெட்டுப்புள்ளியோடு 1.5 புள்ளிகளை இணைத்துக் கொள்ளப்படுகிறது.

15 வயக்கு மேற்பட்டவர்களுடைய விளையாட்டாக இருந்தாலும் எந்த பலமான பாதிப்பு ஏற்படாது. குறிப்பாக தாக்குதலை எந்தளவு மேற்கொள்கின்றார்கள். அதனை எந்தளவு தடுக்கின்றார்கள் என்ற வகையிலான மதிப்பீடுகள் இந்த விளையாட்டின் போது அவதானிக்கப்படுகிறது.

பலமான தாக்குதல் மூலம் நடைபெறும் விளையாட்டுக்களுக்கு அதற்கான உடல் கவசங்கள் இருக்கின்றன. இந்த குத்துச் சண்டையின் மூலம் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இம்மாதம் 13 ஆம் திகதி பாககிஸ்தான் நாட்டில் நடைபெறும் கிக் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்ளும் வீர வீராங்கனைகளான இர்ஷாட், அக்மல், ஹக்கீம், பண்டார, பஹ்மா, சுஹைல் அக்தார், ரஷி, மன்சில், சாதீர், முஆவியா, இந்து ஆகிய வீர வீராங்களை போட்டியில் கலந்து செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இக்பால் அலி ...

# நியூசிலாந்தை வீழ்த்தி பங்களாதேஷ் வரலாற்று சாதனை படைத்தது










மவுண்ட் மவுங்கானுய் மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் உலக சம்பியனான நியூசிலாந்தை வீழ்த்தி பங்களாதேஷ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

வரலாற்று வெற்றிக்கு சுற்றுலா அணியான பங்களாதேஷ் அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் 40 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது, இது நியூசிலாந்தில் அவர்களின் முதல் மற்றும் 61 வெளிநாட்டு டெஸ்ட்களில் ஆறாவது மட்டுமே.

எபாடோட் ஹொசைன் 46 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை எடுத்ததால், கடைசி நாளில் போட்டி ஒரு அமர்வில் முடிந்தது, மேலும் நியூசிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் 169 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இது டேவிட் மற்றும் கோலியாத் முடிவு, பங்களாதேஷ் உலக தரவரிசையில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது, அதே நேரத்தில் உலக டெஸ்ட் சாம்பியனான நியூசிலாந்து இரண்டாவது இடத்தில் உள்ளது.

கடந்த நான்காண்டுகளில் 16 போட்டிகளில் சொந்த மண்ணில் நியூசிலாந்தின் முதல் தோல்வி இதுவாகும்.

பங்களாதேஷ் இதற்கு முன்பு நியூசிலாந்தில் விளையாடிய அனைத்து 32 போட்டிகளிலும் ஒன்பது டெஸ்ட் போட்டிகள் உட்பட அனைத்து வடிவங்களிலும் தோல்வியடைந்துள்ளது.

ஆனால் நியூசிலாந்தின் முதல் இன்னிங்ஸில் டெவோன் கான்வே மற்றும் வில் யங் ஆகியோரின் 138 ஓட்டங்கள் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டத்தை தவிர, இந்த டெஸ்டில் அவர்கள் நம்பிக்கையுடன் தாக்கினர், சுற்றுலா பங்களாதேஷ் அணி பெரும்பாலும் கட்டுப்பாட்டில் இருந்தனர்.

நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 328 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த பிறகு, மொமினுல் ஹக் (88) பங்களாதேஷை 478 ஓட்டங்களுக்கு அழைத்துச் சென்றார், இது உண்மையாகவே இருந்தது மற்றும் நியூசிலாந்து விக்கெட்டுகளில் வழக்கமாக காணப்படும் வேகப்பந்து வீச்சாளர்களிடம் வழக்கமான சார்பு இல்லாத ஒரு ஆடுகளத்தில் 130 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

பின்னர், பந்துவீச்சு பயிற்சியாளர் ஒட்டிஸ் கிப்சனின் விளையாட்டின் நிதானமான போக்குக்கு நன்றி, பங்களாதேஷ் தனது இரண்டாவது இன்னிங்ஸில் நியூசிலாந்தை வீழ்த்த 73.4 ஓவர்கள் மட்டுமே தேவைப்பட்டது.

பே ஓவல் விக்கெட் ஸ்லிப் பிடிகளை வழங்கவில்லை என்று கிப்சன் குறிப்பிட்டார், இது நியூசிலாந்து நிலைமைகளில் பொதுவானது, மேலும் அவர் விக்கெட்டுக்கு விக்கெட் பந்துவீச்சுக்கு அழைப்பு விடுத்தார்.

நியூசிலாந்து பந்துவீசுவது வேறுபட்டது, அவர்கள் நீளத்திற்கு பந்து வீசவில்லை, அவர்கள் குறுகியதாக ஆனார்கள், அது அவர்களின் தந்திரம், அது அவர்களுக்கு வேலை செய்கிறது.

நீல் வாக்னர் அதில் மிகவும் திறமையானவர், ஆனால் நாங்கள் வித்தியாசமாக இருக்கிறோம், நாங்கள் ஸ்டம்ப்களில் இன்னும் நிறைய பந்து வீச முயற்சி செய்கிறோம், அது எங்களுக்கு வேலை செய்ததைப் பார்ப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது,என்று அவர் கூறினார்.

நியூசிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் எங்களை குறைத்து மதிப்பிட்டிருக்கலாம். நாங்கள் காட்டிய திறமை அருமை.

எபாடோட் அறிவுறுத்தலை விரும்பினார் மற்றும் அவரது சிறந்த பந்துவீச்சு புள்ளிவிவரங்களை உருவாக்கினார்.

அவர் முதல் இன்னிங்ஸில் சதம் அடித்த டெவோன் கான்வேயை 13 ஓட்டங்களுக்கு நீக்கினார், மேலும் ஒரு விரைவான ஆட்டமிழப்பில் ஹென்றி நிக்கோல்ஸ் மற்றும் டாம் ப்ளண்டெல் ஆகியோருடன் சேர்ந்து வில் யங் (69) ஓட்டங்கள் எடுக்காமல் வெளியேறினார்.

புதன்கிழமை காலை அவர் ரோஸ் டெய்லர் (40) மற்றும் கைல் ஜேமிசன் (0) ஆகியோரைக் கணக்கிட்டார், அதே நேரத்தில் தஸ்கின் அகமது மற்றும் மெஹிடி ஹசன் இருவரும் பெவிலியன் திரும்ப வழிவகுத்தனர்.

மஹ்முதுல் ஹசன் ஜாய் ஒரு பிளவுபட்ட கைக்கு தையல் போட்டதால், நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ தொடக்க ஆட்டக்காரராக பதவி உயர்வு பெற்று 17 ஓட்டங்களை வெற்றியின் துரத்தலுக்கு பங்களித்தார்.

ஷத்மன் இஸ்லாம் 3 ஓட்டங்களிலும், தலைவர் மொமினுல் ஹக் 13 ஓட்டங்களிலும், முஷ்பிகுர் ரஹீம் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

எபாடோட் ஹொசைன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டு அணிகளும் மோதும் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 9ம் திகதி கிரிஸ்சேர்ச் மைதானத்தில் இடம்பெறுவுள்ளது.

## இலங்கை கிரிக்கெட் அணியின் தற்காலிக பயிற்சியாளராக ருமேஷ் ரத்நாயக்க



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தின் போது, இலங்கை கிரிக்கெட் அணியின் தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக ருமேஷ் ரத்நாயக்க செயற்படுவார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

நாளை வெள்ளிக்கிழமை 07ஆம் திகதி இலங்கை வரும் சிம்பாப்வே கிரிக்கெட் அணி, சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சுப்பர் லீக்கிற்காக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவிருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆத்தரின் பதவிக்காலம் நிறைவடைந்த பின் தலைமைப் பயிற்சியாளர் இன்றி காணப்படும் இலங்கை கிரிக்கெட் அணிக்கே தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், இலங்கை கிரிக்கெட் உயர் செயற்திறன் நிலையத்தின் பந்துவீச்சுப் பயிற்சியாளருமான ருமேஷ் ரத்நாயக்க நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்.

உயர் செயற்திறன் நிலையத்தின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக காணப்படும் ருவின் பீரிஸ் சிம்பாப்வே தொடரின் போது இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் செயற்படவிருக்கின்றார் என இலங்கை கிரிக்கெட் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை – சிம்பாப்வே அணிகள் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இம்மாதம் 16ஆம் திகதி கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

## விக்டோரியா அணைக் கட்டுக்கு சென்ற மகாராணியின் கோல்



இவ் ஆண்டுக்கான கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் முன்னோடியான மகாராணியின் கோல் தொடர் ஓட்டம் ஜூலை 28 ஆம் திகதி தொடங்கி ஆகஸ்ட் 8 ஆம் திகதி முடிவடைகிறது, அதன் இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினம் கண்டியில் உள்ள மலையகத் தலைநகருக்குச் சென்றது.

காலை அமர்வில் விக்டோரியா அணைக்கு எடுத்துச் செல்லப்பட்டது, அங்கு அதன் இருப்பைக் குறிக்கும் வண்ணமயமான கலாசார விழா நடைபெற்றது.

விக்டோரியா அணையில் இலங்கை ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் கவுன்சிலால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி நிகழ்ச்சி, ரணபிம ரோயல் கல்லூரியின் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மகாராணி கோலின் மதிப்புகள் மற்றும் முக்கியத்துவத்தை சித்தரிக்கும் கலை மற்றும் மாதிரி கண்காட்சியில் பங்கேற்றனர்.

கொமன்வெல்த்தின் 72 நாடுகள் மற்றும் பிரதேசங்கள் ஊடாக 294 நாள் தொடர் ஓட்டம் தொடங்குவதைக் குறிக்கும் வகையில், மகாராணி காமன்வெல்த்துக்கு தனது செய்தியை கோலில் அனுப்பிய 25வது இடம் இலங்கை ஆகும்.

நேற்று இரவு, நடவடிக்கை ஹற்றனுக்கு பயணித்தது, அங்கு இன்று காலை கிர்கோஸ்வால்ட் தேயிலை தோட்டத்தில் வைபவம் நடைபெற்றது.

கிர்கோஸ்வால்ட் தோட்டத்திற்கு விஜயம் செய்து இன்று தலைநகர் திரும்பிய ஜோதி, விளையாட்டு தொடர்பான சில நடவடிக்கைகளுக்காக விளையாட்டு அமைச்சுடன் கைகோர்ப்பதற்கு முன்னர் இரத்மலானையில் உள்ள மாற்று ஆற்றல் உள்ளோர் பாடசாலைக்கு விஜயம் செய்யும்.

மகாராணியின் கோல் பங்களாதேஷிற்கு புறப்படுவதற்கு முன்னர் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு விஜயம் செய்வதோடு முடிவடையும்.

## பானுக ராஜபக்ஷ, அஞ்செலோ பெரேரா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு



இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்டவீரரான பானுக்க ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கான நிலைப்பாட்டில் இருப்பதாக அறிய முடிகிறது.அத்துடன் இலங்கை அணியின் மற்றொரு வீரர் அஞ்செலோ பெரேரா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பானுக்க ராஜபக்ஷ தான் ஓய்வு பெறும் நிலைப்பாட்டில் இருக்கும் விடயம் பற்றி, இலங்கை கிரிக்கெட் இற்கு கடிதம் ஒன்றின் மூலம் அறிவித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வாளர்கள் உருவாக்கியிருக்கும் உடற்தகுதி பரிசோதனைகளின் சிக்கல் தன்மையினை கருத்திற்கொண்டிருக்கும் பானுக்க ராஜபக்ஷ தனது வேண்டுகோள்கள் பூர்த்தி செய்யப்படாதபட்சத்தில் ஓய்வு பெறுவது குறித்து தீர்மானம் மேற்கொள்ளவுள்ளதாகநம்பப்படுகின்றது.

அதன்படி தான் வழங்கியுள்ள கடிதத்தில் இம்மாதம் 7ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் உடற்தகுதி பரிசோதனையில் இருந்து கடந்த ஆறு மாதகாலமாக இடம்பெற்ற தொடர் கிரிக்கெட் தொடர்கள் கருதி தனக்கு விடுகை தருமாறு பானுக்க ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பானுக்க ராஜபக்ஷ தனக்கான உடற்தகுதிப் பரிசோதனையினை சிம்பாப்வே, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர்களின் பின்னர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் மேற்கொள்ளுமாறு இலங்கை கிரிக்கெட் சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இம்மாதம் 16ஆம் திகதி இலங்கை – சிம்பாப்வே அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் பல்லேகலேயில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த தொடரில் பங்கெடுக்கும் இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் உடற்தகுதி பரிசோதனையாக 2 கிலோ மீற்றர் தூரத்தினை 8 நிமிடம் 10 செக்கன்களில் ஓடி முடிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, ஏனைய உடற்தகுதி பரிசோதனையான Skin Fold சோதனையில் 70 இற்கு குறைவான பெறுபேறுகளை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

2021ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட் அணிக்காக 5 ஒருநாள் போட்டிகள் அடங்கலாக 18 ரி 20 போட்டிகளில் ஆடிய பானுக்க ராஜபக்ஷ திருப்புமுனையான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்ததோடு, நடைபெற்று முடிந்த ரி 20 உலகக் கிண்ணத் தொடரில் 6 இன்னிங்ஸ்களில் 143.51 என்கிற Strike Rate உடன் 155 ஓட்டங்களைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அஞ்செலோ பெரேரா (31 வயது) இலங்கை அணிக்காக 6 ஒருநாள் மற்றும் 6 ரி 20 போட்டிகளில் மாத்திரமே விளையாடியுள்ள நிலையில், திடீரென இந்த ஓய்வு தீர்மானத்தை வெளியிட்டுள்ளார். இவர் 2013ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகியிருந்ததுடன், 2019ம் ஆண்டு இறுதியாக பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் விளையாடியிருந்தார்.

அஞ்செலோ பெரேரா உள்ளூர் போட்டிகள் மற்றும் சர்வதேசத்தில் நடைபெறும் லீக் போட்டிகளில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படும் அதேநேரம், வெளிநாடொன்றுக்கு குடிபெயர வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் உள்ளூர் போட்டிகளில் அதிகமாக விளையாடியுள்ள இவர்,



என்.சி.சி கழகத்துக்காக பல வருடங்கள் விளையாடியுள்ளார் என்பதுடன், உள்ளூர் போட்டிகளில் மிக முக்கியமான வீரர்களில் ஒருவராகவும் பார்க்கப்படுகின்றார்.

மொத்தமாக 107 முதற்தர போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 48.08 என்ற சராசரியை கொண்டிருப்பதுடன், 150 லிஸ்ட் ஏ போட்டிகளில் 42 என்ற ஓட்ட சராசரியையும் கொண்டுள்ளார். இவர் இறுதியாக நடைபெற்றுமுடிந்த லங்கா பிரீமியர் லீக்கில் கண்டி வொரியர்ஸ் அணியின் தலைவராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.